கல்கி

பொருளடக்கம்

மலர் 7 } இதழ் 28 }

பிப்ரவரி 8

{ சர்வசித்து ஆ
{ தை 26

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.


அலை ஓசை
ஆசிரியர்
'கல்கி'யின்
புதிய தொடர்கதை
மார்ச் மாதத்தில்
ஆரம்பமாகிறது!
-சந்திரா-

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 28

என்ன சேதி?

பழமொழி பொய்த்தது!

முன்னே செல்பவன் முட்டிக்கொண்டால் பின்னே செல்பவனுக்கு விளக்கு எதற்கு? என்னும் இந்தப் பழமொழி ஹைதராபாத் விஷயத்தில் பொய்த்து விட்டது! பிரிட்டன் என்ன, திருவாங்கூர் என்ன, மைசூர் என்ன, இவையெல்லாம் எந்தப் பாறையில் போய் முட்டிக்கொண்டு, யாதொரு பலனையும் காணாமல் தங்களுடைய பாதையை மாற்றிக் கொண்டனவோ, அதே பாறையில் இப்போது ஹைதராபாத் முட்டிக் கொண்டு வருகிறது. பிரிட்டனின் முன்னுதாரணத்திலிருந்தோ, திருவாங்கூர், மைசூர் முதலிய சமஸ்தானங்களின் முன்னுதாரணத்திலிருந்தோகூட நைஜாமின் மூளைக் குழப்பம் தெளியாதது தான் ஆச்சரியமாக இருக்கிறது.

நைஜாமுக்குத் துர் மந்திரியாக இருந்து வரும் ஜனாப் ரஸ்வியைக் காட்டிலும் அறிவிலும் அனுபவத்திலும் செல்வாக்கிலும் மேலானவர்களான திருவாங்கூர், மைசூர் சர்க்கார் தலைவர்கள் எவ்வளவோ பிடிவாதம் செய்தார்கள்; காங்கிரஸ் தலைவர்களைச் சிறைப் படுத்தினார்கள்; ஜனங்களைச் சுட்டுத் தள்ளினார்கள்; இன்னும் என்ன வெல்லாமோ ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனால் அவர்களுடைய போக்கு இறுதியாகப் படுதோல்வியில் முடிந்தது. அப்படியிருந்தும் மேற்படி முன்னுதாரணம் நைஜாமின் கண்களைத் திறக்காதது ஹைதராபாத்தின் துரதிர்ஷ்டமேயாகும். ஜனங்களின் அபிலாஷைகளை நசுக்கச் சில வருஷங்களுக்கு முன் பிரிட்டன் என்ன முறைகளைக் கையாண்டதோ, சில மாதங்களுக்கு முன் திருவாங்கூரும் மைசூரும் என்ன முறைகளைக் கையாண்டனவோ, அதே முறைகளைத்தான் இப்போது ஹைதராபாத் கையாண்டு வருகிறது. எனவே, அவற்றின் முடிவும் அதே விதமாகத்தான் இருக்கும் என்பதற்கு ஜோஸ்யம் பார்க்க வேண்டியதில்லை! தலைவர்களைச் சிறையில் அடைப்பதாலும், ஜனங்களைத் துன்புறுத்துவதாலும், மஜ்லிஸ் தொண்டர் படை, கிராமங்களைக் கொள்ளையிட்டுக் கொளுத்துவதாலும் ஹைதராபாத் பிரச்னை தீரப்போவதில்லை; அதைத் தீர்க்கவல்லது சர்வஜன வோட்டுத்தான்!

சொத்தைப் பூசனிக்காய்

தலைவலி போய்த் திருகுவலி வந்தது! மலாயா நாட்டு மக்களுக்கு ஓர் அழுகல் பூசனிக்காயைக் கொடுத்து அவர்களைப் பிரிட்டிஷார் ஏமாற்றப் பார்த்தார்கள். அந்தப் பாச்சா பலிக்கவில்லை. மலாயா ஜனங்கள் உதைத்த வேகத்தில் அந்தப் பூசனிக்காய் நூறு சுக்கல்களாக நொறுங்கி இருந்தவிடம் தெரியாமல் சிதறுண்டு விட்டது. எனினும், அதற்கெல்லாம் மசிகிறவர்கள் பிரிட்டிஷாரா? மறுபடியும் மலாயா ஜனங்களுக்கு ஒரு சொத்தைப் பூசனிக்காயைக் கொடுத்து, "முன்போலன்றி இது ரொம்ப நல்ல காயாக்கும்" என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்!

இப்போது அமுலுக்கு வந்துள்ள மலாயா சமஷ்டி அரசியலின்படி பெரும்பான்மையோரான சீனர்களுக்கும் இந்தியர்களுக்கும் நியாயமான உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. உலகம் முழுதும் சர்வஜன வோட்டுரிமை அனுஷ்டானத்துக்கு வந்து கொண்டிருக்கும் இக்காலத்தில், மலாயா 'பார்லிமெண்டி'ல் மாத்திரம் பெரும்பான்மையானவர்கள் நியமிக்கப்படுவார்களாம்!


போதாக் குறைக்கு, பிரிட்டிஷாரின் வெகு காலத்திய சம்பிரதாயத்தை அனுசரித்து மலாயாவிலிருந்து சிங்கப்பூரைத் தனியாகப் பிரித்திருப்பதுடன், ஜனங்களைக்கூட மலாயா சமஷ்டிப் பிரஜைகளென்றும் பிரிட்டிஷ் பிரஜைகளென்றும் இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். எனவே இத்தனை அவலட்சணங்கள் நிறைந்த புதிய அரசியலைக் கண்டித்து மலாயா ஜனங்கள் சென்ற வாரம் துக்க தினம் கொண்டாடியிருப்பதிலும், மலாயாவிலுள்ள பதினாயிரக்கணக்கான தொழிலாளிகள் ஏகோபித்த வேலைநிறுத்தம் செய்திருப்பதிலும் தவறு என்ன?



ஜனவரி மீ 30௳ மாலை 5 மணிக்கு மகாத்மா காந்தி வழக்கம் போலத் தமது பேரப் பெண்களுடனே பிரார்த்தனைக்குப் புறப் பட்டார். மறுநாள் வெளியான தினப் பத்திரிகைகளில்,............




............"காந்தி மகான் இந்த உலக வாழ்க்கையில் இறுதியாகச் செய்த காரியம், பிரார்த்தனைக்கு வந்திருந்த ஜனங்களைப் பார்த்துக் கும்பிட்டதுதான்!" என்னும் செய்தி பிரசுரமாயிற்று.



உயிரை இழந்த மகாத்மாவின் புனித தேகத்தின்மீது மலர்மாரி பொழிந்தது.

★

அவரது கழுத்தில் நூல் மாலையும் துளசிமணி மாலையும் விளங்கின.



சத்தியம் செத்ததோ?

கண்களே! கண்ணீர் பெருக்குங்கள்! ஒரு துளிக் கண்ணீர் பாக்கியுள்ள வரையில் கண்ணீர் பெருக்குங்கள்! கருணாமூர்த்தியான காந்திமகானின் புனிதத் திருமுகத்தை நீங்கள் இனிக் காணமாட்டீர்கள்! அவருடைய தாமிரவர்ணத் திருமேனியைப் பார்க்கமாட்டீர்கள்!

செவிகளே! நீங்கள் செவிடாகித் தொலையுங்கள். வேதத்தையும் வேய்ங்குழலின் கீதத்தையும் நிகர்த்த அந்தப் புண்ணியனின் அமுத மொழிகளை நீங்கள் இனிக் கேட்க முடியாது.

நாவே! உனக்கு அழுது புலம்ப இன்னும் சக்தி இருந்தால் அழுது புலம்புவாய்! இத்தனை காலமும் தினம் தினம் பத்து நூறு ஆயிரம் தடவை எந்த மகாத்மாவின் திருநாமத்தைச் சொல்லி வந்தாயோ, அந்த மகாத்மா இந்தப் பூவுலகத்தை விட்டுப் போய்விட்டார். அழு! அழு! புலம்பி அழு!

நெஞ்சே! ஏன் துடிக்கிறாய்? இதயமே! ஏன் இப்படித் தவிக்கிறாய்? "ஆத்மாவுக்கு மரணமில்லை!" என்பதை மறந்து விட்டாயோ? ஆத்மாவுக்கு மரணமில்லையென்றால், மகாத்மாவுக்கு மரணம் உண்டோ?

விரல்களே! ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்? அவருடைய திருநாமத்தை எத்தனையோ ஆயிரம் தடவை எழுதியிருக்கிறீர்களே? இப்பொழுது என்ன தயக்கம்? என்ன நடுக்கம்? அந்தக் கொலைபாதகனின் துப்பாக்கி பிடித்த கை நடுங்கவில்லையே? அந்தச் சண்டாளனின் விரல்கள் தடுமாறவில்லையே? சரியாகக் குறி பார்த்துச் சுட்டானே? அஹிம்சா மூர்த்தியின் அருகில் நின்று மார்புக்கு நேரே இலக்கு வைத்துச் சுட்டானே? யமனும் செய்ய நடுங்கக்கூடிய காரியத்தை அந்த மனித உருக்கொண்ட அரக்கன் செய்து விட்டானே? அதைப்பற்றி எழுதுவதற்கு நீங்கள் ஏன் நடுங்க வேண்டும்?

சத்தியமே! நீ செத்துப் போனாயோ? தர்மமே! நீ மாண்டு போனாயோ? கடவுளே! நீ என்ன செய்கிறாய்? எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு சாட்சியாக விளங்குகிறாயோ? எந்தக் கோர்ட்டிலே போய் நின்று சாட்சி சொல்லப் போகிறாய், பகவானே! சத்தியம் செத்துப் போன பிறகு உன்னுடைய சாட்சியத்தைத்தான் யார் நம்பப் போகிறார்கள்?

சர்வசித்தி வருஷமே! நயவஞ்சகப் படுபாதக வருஷமே! நீ பிறந்தது முதல் என்னவெல்லாமோ எங்களுக்குக் காரியங்களைச் சாதித்துக் கொடுத்து வந்தாயே! உன்னை அடிக்கடி புகழ்ந்து வந்தோமே? இந்த மாதிரி கடைசியில் பெரிய கல்லாகத் தூக்கி எங்கள் தலையில் போட்டு விட்டாயே? இதற்காகத் தானா இவ்வளவு நாளும் வெற்றிக்கு மேலே வெற்றி அளிப்பதுபோல் பாசாங்கு செய்து வந்தாய்? சர்வசித்தி வருஷமே! நீ சர்வநாசமடைவாய்!

* * * *

எந்தையே! இந்தியாவின் தந்தையே! என்ன காரியம் செய்து விட்டீர்கள்? புதிதாகக் கிடைத்த சுதந்திரத்துக்கு நாலாபுறமும் அபாயங்கள் சூழ்ந்திருக்கும் இந்தச் சமயத்திலா தங்களுடைய இறுதி யாத்திரையைத் தொடங்க வேண்டும்? அடிகளே! சொர்க்கத்துக்குப் போக அவ்வளவு அவசரமா? இந்தியா தேசமே தங்களுடைய சொர்க்க பூமி என்று பல தடவை சொன்னீர்களே; அந்த வாக்கு இப்போது என்ன ஆயிற்று?

இந்த உலகில் 125 வருஷம் உயிர் வாழப் போவதாக அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தீர்களே! அந்த வார்த்தைதான் என்னவாயிற்று? வாக்கு மாறாத சத்திய சந்தர் என்று பெயர் பெற்ற தாங்களே இப்படிச் செய்தால், எங்களுடைய கதி என்ன?

ஆகா! தங்கள் வாக்கின்படி தாங்கள் நடந்திருந்தால், இந்தத் துயரத்தை அநுபவிக்கும் விதி எங்களுக்கெல்லாம் நேர்ந்திராதல்லவா? தங்களுக்கு முன்னாலேயே எங்கள் அந்திம யாத்திரை ஆரம்பமாகியிருக்குமல்லவா? தந்தையையும் தலைவரையும் அரசரையும் ஆச்சாரியரையும் உற்ற நண்பரையும் ஒரே சமயத்தில் இழந்து அநாதைகளாகித் தவிக்க மாட்டோமல்லவா?

என்ன சொல்லி என்ன? எத்தனை வித்தகமாகப் பேசினாலும் எழுதினாலும் என்ன? காந்தி மகான் போய்விட்டார். அவருடைய புனிதத் திருமேனி அக்கினிக்கு இரையாகிப் பிடி சாம்பராகி விட்டது. அந்தப் பிடி சாம்பரும் வருகிற 12-ல் இந்திய நாட்டில் உள்ள ஏழு புண்ணிய நதிகளின் தண்ணீரில் கரைக்கப்பட்டு விடும்.

*   *   *   *

இந்த மாநிலத்தில் அவ்வப்போது வெவ்வேறு இடங்களில் மகா புருஷர்கள் தோன்றியிருக்கிறார்கள். கடவுளின் உண்மை சொரூபத்தைக் கண்டு உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள். மனித குலம் உய்ய நல்ல வழியைக் காட்டியிருக்கிறார்கள். மானிடர்கள் உயர நற்போதனை செய்திருக்கிறார்கள்.

பிறந்த நாட்டின் விடுதலைக்காக மகத்தான தியாகங்களைச் செய்து போராடி வெற்றி பெற்ற தீரர்கள் உலகிலே இருந்திருக்கிறார்கள்.

விஸ்தாரமான பிரதேசங்களை ஒரு குடையின் கீழ் ஆண்ட மன்னாதி மன்னர்கள் பலர் உலக சரித்திரத்தில் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

பெரும் சேனைகள் திரட்டிக்கொண்டு மாநிலம் அதிரும்படியாகப் படையெடுத்துச் சென்று தேச தேசங்களையெல்லாம் கைப்பற்றி வெற்றிக் கொடி நாட்டிய வீரர்கள் பலரும் உலகிலே வாழ்ந்திருக்கிறார்கள்.

அவர்களில் யாருடைய மரணத்தின்போதும் உலகம் இந்தவிதமாகக் கலங்கியது கிடையாது. வட துருவத்திலிருந்து தென் துருவம் வரைக்கும் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரைக்கும் உள்ள மக்கள் இவ்விதமாக எந்த நாளிலும் பதைபதைத்தது கிடையாது.

புது டில்லியில் அரசு புரிந்த எந்த பாதுஷாவும் சக்கரவர்த்தியும் மரணத்திற்குப் பிறகு இவ்விதம் பத்து லட்சம் மக்கள் பின்னோடு தொடர்ந்து வர மயான பூமிக்குச் சென்றதில்லை. சகல தேச மக்களாலும் இந்த விதமாகக் கௌரவிக்கப்பட்டதில்லை.

*   *   *   *

தீர்க்கதரிசிகள்—அவதார புருஷர்களின் கூட்டத்திலே மகாத்மா காந்தி ஒரு தனிப்பட்ட உன்னத ஸ்தானத்தை அடைந்தவர்.

உலகிலே இதற்கு முன்னால் தோன்றியிருக்கும் எந்த மகா புருஷரும் தீர்க்கதரிசியும் தமது வாணாளில் இவ்வளவு பெருந்திரளான மக்களால் போற்றப்பட்டதில்லை; இவ்வளவு லட்சக் கணக்கான பக்தியுள்ள சீடர்களைப் பெற்றதில்லை; மரணமடைந்த உடனே இவ்வளவு கோடானு கோடி மக்களின் இதயத்தில் கோயில் கொண்டதும் கிடையாது.

அத்தகைய மகா புருஷர் இந்தப் புண்ணிய பாரத பூமியின் மண்ணிலே நடந்து சென்ற நாளிலே நாமும் வாழக் கொடுத்துவைத்திருந்தோம். இது நமது மகத்தான பாக்கியம்; பூர்வ ஜன்மத்துப் புண்ணியம்.

அந்த மகா புருஷரின் மனதுக்குச் சொல்ல முடியாத வேதனை தந்தோம். நம்முடைய குற்றங்களுக்காகப் பலமுறை உண்ணாவிரதமிருக்கப் பார்த்திருந்தோம். கடைசியில், ஒரு கொடிய ராட்சதன் கையினால் அவர் சுடப்பட்டுத்

தரையில் சாய்ந்த செய்தியைக் கேட்க உயிரோடிருந்தோம். இவையெல்லாம் நமது பூர்வ ஜன்மத்துப் பாவத்தினால் விளைந்த விளைவுகள்.

ஆகா! மகாத்மா இறந்த செய்தி கேட்டதும் தாங்களும் விழுந்து இறந்த ஸ்திரீகளும் புருஷர்களும் புண்ணியாத்மாக்கள். காந்திஜி போகும் பாதையிலேயே அவர்களும் விண்ணுலகத்துக்குப் போவார்கள் அன்றோ?

ஆனால் எல்லாரும் அத்தகைய பாக்கியசாலிகள் ஆக முடியாது. இந்த மண்ணுலகத்தில் நாம் இன்னமும் வாழ்ந்திருக்க வேண்டியிருக்கிறது. எத்தனை காலம் வாழ்ந்திருக்க வேண்டுமோ, தெரியாது. விதியின் உத்தேசம் என்னவோ, நாம் அறியோம்.

ஆனால் எத்தனை காலம் இனி வாழ்ந்திருந்தாலும், 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 30-ந் தேதி வரையில் இருந்ததுபோல் இனி நம் வாழ்க்கை ஒருகாலும் இராது. பெரும் வித்தியாசம் இருக்கத்தான் இருக்கும்.

சூரியன் நிரந்தரமாக அஸ்தமித்து உலகில் முடிவில்லாத இருள் சூழ்ந்துவிட்டால் உலகத்தின் வாழ்க்கை முன்போல் இருக்க முடியுமா? ஒரு நாளும் முடியாது. அந்த நிலையிலேதான் இன்று நாம் இருக்கிறோம், நமது வாழ்வில் அப்படி இருள் கவிந்திருக்கிறது

சென்ற முப்பது வருஷங்களாக, காந்தி மகானுடைய வாழ்க்கையைச் சுற்றி நம்மில் லட்சக்கணக்கானவர்களின் வாழ்க்கை சுழன்று வந்திருக்கிறது.

காந்தி சொன்னார்: கதர் அணிந்தோம். காந்தி சொன்னார்: காங்கிரஸில் சேர்ந்தோம். காந்தி சொன்னார்: மது விலக்குப் போர் நடத்தினோம். காந்தி சொன்னார்: தீண்டாமையை ஒழித்தோம் காந்தி சொன்னார்: 'ரகுபதி ராகவ' பாடினோம். காந்தி சொன்னார்: சட்ட சபையைப் பகிஷ்கரித்தோம். காந்தி சொன்னார்: மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டோம். காந்தி சொன்னார்: சிறை புகுந்தோம்; அடிபட்டோம்; நூல் நூற்றோம்.

காந்தி ஒரு விஷயத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையென்றால், அதைப் பற்றி அவர் என்ன சொல்லக் கூடும் என்று யோசனை செய்தோம்.

"மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷத்தைச் சென்ற முப்பது வருஷத்தில் முப்பதினாயிரம் தடவை கோஷித்தோம்.

அத்தகைய மகாத்மா இன்று இந்த உலகில் இல்லை; இந்தியா சுதந்திரம் அடைந்து ஒரு வருஷம் பூர்த்தியாவதற்குள்ளே போய்விட்டார்.

உயிர் வாழ்ந்த போது இந்தியாவின் சுதந்திரத்துக்காக மகாத்மா போராடினார்; சுதந்திரம் கிட்டும்படியும் செய்தார்.

கிட்டிய சுதந்திரத்தை நமது மூடத்தனத்தினால் இழந்து விடாமல் பாதுகாத்துத் தரும்பொருட்டுத் தமது உயிரை அர்ப்பணம் செய்தார்.

அவருக்கு நாம் செலுத்தக்கூடிய நன்றி என்ன இருக்கிறது? என்ன இருக்கமுடியும்? என்ன செய்தால்தான் நமது நன்றிக் கடன் தீரும்?

* * * *


மகாத்மாவை இழந்துவிட்ட நமது வாழ்க்கையை நாலாபுறமும் அந்தகாரம் சூழ்ந்துதானிருக்கிறது. எனினும், அந்த இருளினிடையே நமக்கு வழி காட்ட ஒளி ஒன்று தோன்றாமற் போகவில்லை.

அன்பே தகளியாகவும், அஹிம்சையே நெய்யாகவும், என்புருகும் தியாகமே இடுதிரியாகவும் கொண்டு ஓர் அமர தீபத்தை,— அழியாத சத்திய விளக்கை — மகாத்மா காந்தி ஏற்றிவைத்து விட்டுச் சென்றிருக்கிறார்.


அந்த சத்திய தீபத்தைத் தினம் தினம் போற்றி வழிபடுவோம்; காற்றும் புயலும் அதை அணைத்து விடாமல் பாதுகாப்போம்.

காந்திமகான் ஏற்றிவைத்த அமர தீபத்தின் ஒளியிலேயே நமது காரியங்களை யெல்லாம் செய்வோம். இதுவே அந்தப் புண்ணிய புருஷருக்கு நாம் செலுத்தக்கூடிய சொற்ப கைம்மாறாகும். மகாத்மா காந்திக்கு ஜே!

அசட்டு உலகமே!



பூவுலகம் :—ஐயோ! என்னை ரட்சிக்க வந்த அவதார புருஷர் எங்கே?
மற்ற அண்டங்கள் :—அசட்டு உலகமே! புத்தர் முதல் காந்தி வரையில் எத்தனையோ




(1) காந்தி மகான் காலமான செய்தி பரவியதிலிருந்து. அவருடைய திருமேனியின் தரிசனத்துக்காகப் பிர்லா மாளிகையின் வாசலில் அளவில்லா ஜனத் திரள் கூடிக் காத்திருந்தது.

(2) மகாத்மாவின் செல்வப் புதல்வர் தேவதாஸ் காந்தியும் ஞானப் புதல்வர் ஜவாஹர்லால் நேருவும் விரைந்தோடி வந்தார்கள்!







(1) பற்பல தேசங்களின் பிரதிநிதிகளும் தூதர்களும் மகாத்மாவின் திருமேனிக்கு மரியாதை செய்யப் பூமாலைகளுடன் வந்தார்கள். (2) காந்தியின் திருமுகத்தைக் கடைசி முறை தரிசிக்கும் ஆசையினால் ஜனங்கள் ஏறக் கூடாத இடத்திலெல்லாம் ஏறி நிற்க முடியாத இடத்திலெல்லாம் நின்றார்கள். (3) கவர்னர் ஜெனரல் மவுண்ட்பாட்டன், லேடி மவுண்ட்பாட்டன், சர்தார் பட்டேல், மௌலானா ஆஸாத், சர்தார் பலதேவ்சிங், சீனசர்க்காரின் தூதர் ஆகியவர்கள் துயரமே உருவமாய் உட்கார்ந்து மகாத்மாவின் திருமேனி தீக்கிரையாகும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.







(1) மகாத்மாவின் திருமேனி ஊர்வலத்தின்போது வழியெங்கும் லட்சக்கணக்கான மக்கள் காத்திருந்ததுடன், தண்ணீரில் நீந்திச் சென்று ஜார்ஜ் மன்னர் சிலை வைத்திருந்த மண்டபத்தின் மேடையில் ஏறி நின்றும் தரிசனம் செய்தார்கள்.

(2) அந்தோ! அக்கினியே! அண்ணலின் உடலை எரித்து நீ புனிதம் அடைந்தாயோ?



இந்தியா அரிதில் பெற்ற சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், ஹிந்து சமூகம் உருப்பட்டுப் பிழைத்து முன்னேற வேண்டுமானால், இப்போதைய நிலைமையில் அதற்கு வழி ஒன்றே ஒன்றுதான் உண்டு.

பண்டித ஜவாஹரைத் தலைவராகக் கொண்ட இந்திய சுதந்திர சர்க்காரை ஹிந்து மகா ஜனங்கள் ஒரேமுகமாக ஆதரித்து நிற்க வேண்டும்.

ஹிந்து சமூகத்துக்குள் பிளவு கூடாது; வேற்றுமை கூடாது; தனித் தனியே கட்சி கட்டுவதும் கூடாது.

ஹிந்து மகாசபை உடனே கலைக்கப்படவேண்டும். ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கம் இந்த க்ஷணமே கலைக்கப்பட வேண்டும்.

சமூகத்தையோ சமயத்தையோ அடிப்படையாகக் கொண்ட கட்சி எதுவும் கூடவே கூடாது. அந்த வழி சர்வ நாசத்துக்கு வழி; ஹிந்து சமூகம் சின்னபின்னப்பட்டுப் போவதற்கு வழி.

உண்மையில், இன்னும் சில காலம் வரையில் காங்கிரஸைத் தவிர வேறு அரசியல் கட்சிகளுக்கும் இந்த நாட்டில் இடம் இருக்கக்கூடாது.

காந்தி மகானுடைய மரணத்தைக் கம்யூனிஸ்ட் தலைவரும் ஸோஷலிஸ்ட் தலைவரும் எப்படி உபயோகப் படுத்த விரும்புகிறார்கள், பாருங்கள்.

"காங்கிரஸ் சர்க்காரின் கண் பார்வையின் கீழே இந்தப் படுகொலை நடந்திருக்கிறது. மகாத்மாவின் மரணத்துக்குக் காங்கிரஸ் சர்க்காரே ஜவாப்தாரி!" என்று திருவாய் மலர்கிறார் தோழர் பி. ஸி. ஜோஷி.

"காங்கிரஸ் மந்திரிகள் எல்லாருமே ராஜிநாமா செய்து விட்டு மந்திரி சபையைப் புனர் நிர்மாணம் செய்ய வேண்டும்" என்று அறைகிறார் ஸ்ரீ ஜெயப்பிரகாச நாராயணர்.

கட்சி மனப்பான்மை மேற்படி தலைவர்களை இப்படியெல்லாம் பேசும்படி செய்து விட்டிருக்கிறது.

இந்தியாவின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு இதுதானா வழி?

இல்லை, இல்லை! அந்த வழியிலே சென்றால் இந்தியா அதோகதி அடையும்படி நேரும்.

இந்திய மக்களே! ஜவாஹர்லாலைத் தலைவராகக் கொண்ட சர்க்காரை ஒருமுகமாகத் தாங்கி நில்லுங்கள்.

ஹிந்துக்களே! காங்கிரஸ் சர்க்காரை உறுதியாக ஆதரித்து நில்லுங்கள். நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட உதவுங்கள்.

இச்சமயத்தில் இவ்விதம் செய்யாவிட்டால் இந்தியாவின் சுதந்திரமும் நிலைத்திராது; ஹிந்து சமூகமோ அதலபாதாளத்துக்குப் போய்விடும்.

எச்சரிக்கை! எச்சரிக்கை!!

★ ● ★

காந்தி அஞ்சலி — 1

உயிரையும் கொடுத்தார்!

தென்னாப்பிரிக்காவில் காந்திஜிக்கு உற்ற நண்பராக இருந்தவரும் காந்திஜியைப் பற்றி முதல் முதலாகப் புத்தகம் எழுதியவருமான ஜே. ஜே. டோக் என்னும் பாதிரியார் தம்முடைய புத்தகத்தில் காந்திஜியைப் பற்றிக் கூறுவதாவது:—

"நான் ரோமேன் ரோலண்டைப் பற்றி நினைக்கும்போது டால்ஸ்டாயின் ஞாபகம் எனக்கு வருகிறது. லெனினைப் பற்றி நினைக்கும்போது, நெப்போலியன் ஞாபகம் வருகிறது. ஆனால் காந்திஜியை நினைக்கும்போது ஏசுநாதர் ஞாபகந்தான் வருகிறது. ஏசுநாதரைப்போல காந்திஜி வாழ்கிறார்; அவர் பேசியதைப் போலவே காந்திஜியும் பேசுகிறார். பூலோகத்திலே கடவுளின் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்காகக் காந்திஜி பிரயாசைப்படுகிறார், அரும்பாடு படுகிறார். அதற்காக அவர் என்றாவது ஒருநாள் தம்முடைய உயிரையே கொடுத்தாலும் கொடுப்பார்."

● ● ●

ஹிந்து சமூகமே! ஜாக்கிரதை!

இந்திய சரித்திரம் எச்சரிக்கை செய்கிறது!

இந்தியா தேசத்தின் சரித்திரத்தை ஆராய்ந்தோமானால் ஒரு விஷயம் ஐயமறத் தெள்ளத் தெளியப் புலனாகும்.

''ஹிந்து சமூகத்தின் கொடிய விரோதிகள் அன்னியர்களும் அயலார்களும் அல்ல; ஹிந்து சமூகத்தின் கொடிய விரோதிகள் ஹிந்துக்களே தான்!'' என்று சரித்திரம் சொல்கிறது.

ஒவ்வொரு தடவையும் ஹிந்துக்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டு எதிரிகளுக்கு இடங்கொடுத்த படியினால்தான் இந்தியாவில் அன்னியர் புகுதல் சாத்தியமாயிற்று.

ஹிந்து ராஜாக்களின் பரஸ்பர விரோதங் காரணமாகவே ஆப்கானியரும் பட்டாணியரும் மொகலாயரும் துருக்கியரும் இந்தியாவுக்குள் படையெடுத்து வர முடிந்தது; போரில் வெற்றி அடையவும் சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கவும் முடிந்தது.

அதற்குப் பிறகு நெடுகிலும் அதே காரணந்தான்; அதே காரியந்தான்!

இந்த விஷயத்தை இந்திய சரித்திரம் ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டி ஹிந்து சமூகத்துக்கு எச்சரிக்கை செய்கிறது.

ஆயினும் ஹிந்து சமூகம் அந்த எச்சரிக்கையினால் பயன் அடைந்ததா? அறிவு பெற்றதா? ''ஐயோ! இல்லையே!'' என்றுதான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

தற்சமயம் இந்தியாவெங்கும் என்ன நடக்கிறது பாருங்கள்!

ஹிந்துக்களை ஹிந்துக்கள் தாக்குகிறார்கள்! ஹிந்துக்களின் வீடுகளை ஹிந்துக்கள் கொளுத்துகிறார்கள்! ஹிந்துக்கள் மீது ஹிந்துக்கள் கல்லெறிகிறார்கள்!

ஹிந்து போலீஸாரும் ஹிந்து ராணுவ வீரர்களும் ஹிந்துக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள்!

மொத்தத்தில் ஹிந்து சமூகம் பலவீனம் உற்று வருகிறது!

ஐயோ! சரித்திரத்தின் எச்சரிக்கை சிறிதேனும் பயன்பட்டிருக்கிறதா?

சுதந்திர இந்தியாவுக்குப் பெரிய அபாயம் வெளியே உள்ள பாகிஸ்தானிலிருந்து வரும் என்று எண்ணினோம். இந்தியாவுக்குள்ளே இருக்கும் நாலு கோடி முஸ்லிம்களால் ஒருவேளை வரலாம் என்று சந்தேகித்தோம்.

ஆனால் இப்போது வெளியாகியிருப்பது என்ன?

சுதந்திர இந்தியாவுக்குப் பெரிய அபாயம் ஹிந்து சமூகத்துக்குள்ளேயே தோன்றி வளர்ந்து ராட்சத ஆகிருதியைப் பெற்றிருக்கிறது என்பதுதான்.

மகாத்மா காந்தியை மகாராஷ்டிர ஹிந்து வெறியன் ஒருவன் சுட்டாலும் சுட்டான்.

அதன் பயனாக, இந்திய சுதந்திரத்துக்கு எவ்வளவு பெரிய அபாயம் ஹிந்து சமூகத்துக்குள்ளேயே தோன்றியிருக்கிறது என்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்தது.

ஹிந்து மகாசபையும் ராஷ்டிரீய சுயம்சேவக் சங்கமும் எவ்வளவு பயங்கரத் துவேஷம் நிறைந்த ஸ்தாபனங்களாகி விட்டன என்றும் தெரியவந்தது.

மேற்படி ஸ்தாபனங்களின் மேல் நாடெங்குமுள்ள பொது மக்களின் ஆத்திரம் வரம்பு கடந்து பொங்கியது; பலாத்காரச் செயல்கள் நிகழ்ந்தன.


பொதுமக்களின் பலாத்காரச் செயல்களை அடக்கும் கடமை இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டது. துப்பாக்கிப் பிரயோகமும் செய்ய வேண்டியதாயிற்று.

ஹிந்து சமூகத்துக்கு எப்பேர்ப்பட்ட கொடிய தலைவிதி பாருங்கள்!

முப்பது கோடி ஹிந்துக்களும் ஒரு முகமாக நின்று இந்தியா அடைந்த சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய சமயத்தில், ஹிந்து சமூகத்துக்குள்ளே எவ்வளவு பிளவு? எவ்வளவு ரகளை? எவ்வளவு பொருட் சேதம்? எத்தனை உயிர்ச் சேதம்! மொத்தத்தில் சமூகம் எவ்வளவு பலவீனமுற்று வருகிறது!

ஹிந்து சமூகமே! ஹிந்து மகா ஜனங்களே! ஜாக்கிரதை!

வானுலகின் வாசலிலே!.........



ஜனன தினம்: 2-10-1869. ● அமரரான தினம்: 30-1-1948.



"சின்னஞ் சிறு பிராயத்திலே என்னை மணந்த மணவாளனே! வருக! வருக!" என்று தேவருலகின் வாசலில் நின்று அன்னை கஸ்தூரிபாய் அவருடைய பதியை வரவேற்கிறார்!



தென்னாப்பிரிக்காவில் நடந்த போயர் யுத்தத்தின்போது மகாத்மா காந்தி 'ரெட் கிராஸ்' தொண்டர் படையில் சேர்ந்து, காயம்பட்டவர்களுக்குச் சேவை புரிந்தார்.

●

'டால்ஸ்டாய் பண்ணை' என்ற பெயருடன் ஆசிரமம் ஸ்தாபித்து நடத்தினார்.





சென்ற ஆண்டின் ஆரம்பத்தில், கிழ் வங்காளத்திலுள்ள நவகாளியில் பலாத்காரம் கோர தாண்டவம் ஆடிய போது, மகாத்மா கால் நடையாக நடந்து ஊர் ஊராகச் சென்றார்.



காந்தி மகானின் அஹிம்சை உபதேசம் அந்த பயங்கரப் பிரதேசத்திலும் பெரிதும் பலன் தந்தது.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

தம்பி! சென்ற வெள்ளிக்கிழமை சாயங்காலம் நடந்ததை உனக்கு நினைவு இருக்கிறதா? உன் அக்காள் ராஜம் வானொலிப்பெட்டியின் அருகில் உட்கார்ந்து திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ ஆராதனையை முன்னிட்டு நடந்த சங்கீதக் கச்சேரிகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். திடீரென்று, "ஐயோ! அப்பா! இங்கே வாருங்கள்!" என்று கூவினாள். அதைக் கேட்டு நீ, நான், அம்மா, மாமா, உன் தங்கை பத்மா எல்லாரும் ஓடி வந்தோம். "என்ன? என்ன?" என்று கேட்டோம். ரேடியோப் பெட்டியை எங்கேயாவது தொடக்கூடாத இடத்தில் உன் அக்கா தொட்டு விட்டாளோ, ஒரு வேளை மின்சார சக்தி பாய்ந்து 'ஷாக்' அடித்து விட்டதோ என்று உன் அம்மா பயந்து போனாள். ஆனால் ராஜம் என்ன சொன்னாள், ஞாபகம் இருக்கிறதா? "நன்றாய் ஞாபகம் இருக்கிறது; எப்படி மறக்க முடியும்?" என்கிறாய். ஆம்; மறக்க முடியாதுதான். "ரேடியோவில் என்னமோ சொல்லுகிறார்கள்; பயங்கரமான செய்தி; கேளுங்கள்!" என்று ராஜம் அலறினாள். "அதென்ன, அப்படிப் பயங்கரமான செய்தி? ஒரு வேளை மூன்றாவது உலக மகா யுத்தம் — அணுகுண்டு யுத்தம் — ஆரம்பமாகி விட்டதோ?" என்று நான் திடுக்கிட்டேன். எல்லாரும் ஆவலுடன் மௌனமாகக் கேட்டோம். "ஒரு துக்ககரமான செய்தி......" என்று ரேடியோவில் ஒரு நடுங்கும் குரல் சொல்லிற்று. மேலும் தொடர்ந்து, "நமது அண்ணல், மகாத்மா காந்தி, இன்று மாலை 5 மணிக்குப் பிரார்த்தனைக்குப் புறப்பட்டு வந்தார். பிரார்த்தனைக் கூட்டத்தில் இருந்த ஒருவன் மகாத்மாவைக் கைத்துப்பாக்கியால் மூன்று முறை சுட்டான். ஒரு குண்டு மார்பிலும், இரண்டு குண்டு வயிற்றிலும் பாய்ந்து, நம் அண்ணல் தரையில் சாய்ந்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் உயிர் போய்விட்டது!" என்று அந்த ரேடியோக் குரல் சொல்லிற்று.

நஞ்சினும் கொடிய அந்த வார்த்தைகளைக் கேட்டு எல்லாரும் திகைத்துப் போனோம். உன் அம்மா விம்மி அழத் தொடங்கினாள். உடனே உன் அக்காவும் அழ ஆரம்பித்தாள். குழந்தை பத்மா தேம்பத் தொடங்கினாள். உன் கண்ணிலும் கண்ணீர் ததும்பிற்று. திடீரென்று, உன் அம்மா, "இல்லை, இல்லை. இது ஏதோ பொய்ச் செய்தி!" என்றாள். "அப்படிப் பொய்யாகவேயிருக்கக் கூடாதா?" என்று எல்லாரும் எண்ணினோம். ஆனால் அந்தப் பாழும் ரேடியோ மறுபடியும் ஒரு முறை அதே பயங்கரமான செய்தியைத் திரும்பவும் சொல்லிற்று. பிறகு, ஹிந்தியிலும், இங்கிலீஷிலும் அந்தச் செய்தி சொல்லப்பட்டது.

உன் மாமாவின் முகத்தில் சொல்ல முடியாத வேதனை குடிகொண்டிருந்தது. அவர் டெலிபோனை எடுத்து ஒரு தினப் பத்திரிகையின் காரியாலயத்தைக் கூப்பிட்டார். கூப்பிட்ட மனிதர் கிடைப்பதற்குச் சிறிது நேரம் பிடித்தது. "ரேடியோவில் மகாத்மாவைப் பற்றி ஏதோ பயங்கரமான செய்தி சொல்கிறார்களே, அது உண்மைதானா?" என்று மாமா கேட்டார். "ஆமாம்" என்று பதில் வந்ததாக மாமாவின் முக பாவம் சொல்லிற்று. இதற்குள் ரேடியோவில், "மகாத்மாவின் மரணத்தைப் பற்றி இன்று எட்டரை மணிக்குப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவும் ஸர்தார் வல்லபாய் பட்டேலும் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது!" என்று தெரிவிக்கப்பட்டது. நாம் எல்லாரும் அளவில்லாத துயரத்துடனும் ஆவலுடனும் எட்டரை மணியை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தோம். பண்டித ஜவாஹர்லால்

நேரு பேசினார். கேட்போரின் உள்ளத்தைக் கவரும் அவருடைய வசீகரமான குரலில் சோகம் நிறைந்திருந்தது. அடிக்கடி விம்மிக்கொண்டு பேசினார். "என்ன சொல்வேன்? எப்படிச் சொல்வேன்?" என்று கதறினார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகுவதை நமது மனக் கண்ணால் தெரிந்து கொண்டோம்.

மகாத்மா காந்தி அன்று மாலை ஒரு கொடும் பாதகனால் சுட்டுக் கொல்லப்பட்டது உண்மைதான் என்று ஜவாஹர்லால்ஜியின் பேச்சிலிருந்து அறிந்தோம். மறுநாள் காலை பத்தரை மணிக்குப் பிர்லா மாளிகையிலிருந்து மகாத்மாவின் புனித தேகம் யமுனைக் கரைக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும், அங்கே மாலை நாலரை மணிக்குத் தகனம் செய்யப்படும் என்றும் ஜவாஹர்லால்ஜி தெரிவித்தார். மயானத்துக்குப் போகும் வழியில் உள்ள சாலைகளில் டில்லி வாசிகள் இருபுறமும் அமைதியாக நின்று மகாத்மாவின் திருமுகத்தைக் கடைசி முறையாகத் தரிசிக்கலாம் என்றும் கூறினார்.

பிறகு, ஸர்தார் வல்லபாய் பட்டேல் பேசினார். அவர் விம்ம வில்லை; அழவும் இல்லை. ஆனால் அந்த இரும்பு மனிதரின் வயிர நெஞ்சு துக்கத்தினால் உடைந்து போயிருந்தது என்பது குரலைக் கொண்டே தெரிந்தது. "இன்று மாலை நாலு மணி முதல் ஐந்து மணி வரையில் பாபுஜியுடன் பேசிக் கொண்டிருந்தேன். ஐந்து மணியானதும் பாபு தமது கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, 'நேரமாகி விட்டது. நான் பிரார்த்தனைக்குப் போக வேண்டும்' என்றார். அவரைப் பிரிந்து நான் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனேன்!" என்று சர்தார் சொன்னார்.

தம்பி! உனக்குத் தெரியும் அல்லவா? காந்தி மகாத்மா காலந் தவறாமல் காரியம் செய்யும் வழக்கம் உடையவர். சாதாரணமாக ஒரு நிமிஷம்கூட முன்பின் ஆகாமல் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட காரியங்களைச் செய்வார். இதனால் காலம் சிறிதும் விரயமாகாமல் எத்தனையோ அரும்பெரும் காரியங்களைக் காந்திஜியினால் செய்ய முடிந்தது. மகாத்மாவைத் தரிசிக்கவும் அவருடைய யோசனைகளைக் கேட்கவும் காத்திருந்த ஆயிரக் கணக்கான ஜனங்களின் காலமும் விரயமாகாமல் இருந்தது.

காந்தி மகாத்மா சட்டை போட்டுக் கொள்வதில்லை என்பதும் உனக்குத் தெரியுமே? இது காரணமாக, அவருடைய அரை வேட்டியின் மடியிலிருந்து எப்போதும் ஒரு பெரிய கைக்கடிகாரம் தொங்குவதையும் கவனித்திருப்பாயே?

எனவே, பிரார்த்தனை நேரத்துக்குரிய ஐந்து மணி அடித்ததும், மகாத்மாவின் ஆத்ம சிநேகிதரான ஸர்தார் வல்லபாய் கூடப் பேச்சை நிறுத்திக்கொண்டு புறப்பட வேண்டியதாயிற்று.

சர்தார் பட்டேல் வீடு போய்ச் சேர்ந்தவுடனே அவருக்கு முன்னாலேயே டெலிபோன் மூலம் வந்திருந்த செய்தியைக் கேள்விப்பட்டார். பதைபதைத்த உள்ளத்துடன் திரும்பவும் காந்தி மகான் தங்கி யிருந்த பிர்லா மாளிகைக்கு ஓடினார். "பாபுவின் திருமுகம் சற்று முன்னால் நான் பார்த்தபடியேதான் இருந்தது. அதில் கோபமில்லை; ஆத்திரமில்லை; அன்பும் சாந்தமும் குடிகொண்டு விளங்கிற்று. ஆனால் அந்தப் புனித உடலில் உயிர் மட்டும் இல்லை!" என்று சர்தார் பட்டேல் கூறியபோது உணர்ச்சிப் பெருக்கினால் அவருடைய தொண்டை அடைத்துக் கொண்டது.

தம்பி! அதற்குமேலே நாம் ஒன்றும் கேட்க விரும்பவும் இல்லை. இரவு வெகு நேரம் வரையில் தூக்கமில்லாமல் மகாத்மாவின் மரணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

"இப்படியும் உண்டா?" "இனிமேல் இந்தத் தேசத்தின் கதி என்ன?" "ஈ எறும்புக்குக் கூடத் துன்பம் உண்டாகச் சகியாத அஹிம்சா மூர்த்தியைச் சுட்டுக் கொல்ல எப்படித்தான் ஒருவனுக்கு மனம் வந்தது?" "அவனுடைய கை எப்படி நடுங்காமல் இருந்தது?" "ஐயோ! இப்படிப்பட்ட ராட்சதனும் இந்தியாவில் பிறந்தானே? அதோடு அவன் ஹிந்துவாமே?" என்றெல்லாம் திருப்பித் திருப்பிச் சொல்லி வேதனைப்பட்டுக் கொண்டேயிருந்தோம்.

மறு நாள் நமது வீட்டில் ஒருவரும் சாப்பிடவில்லை. "நீ குழந்தைதானே? பசி பொறுக்கமாட்டாய்; சாப்பிடு!" என்று அம்மா உனக்குச் சொன்னாள். ஆனால் நீ கேட்கவில்லை. "முடியவே முடியாது!" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டாய்.

சனிக்கிழமை காலை பத்து மணிக்கே எல்லாரும் வானொலிப் பெட்டிக்கு அருகில் வந்து உட்கார்ந்து கொண்டோம். மகாத்மா நடத்தும் மாலைப் பிரார்த்தனை

களின்போது பாடப்படும் "ரகுபதி ராகவ ராஜாராம்" என்னும் நாமாவளி பஜனை ரேடியோவில் கேட்டது. "வைஷ்ணவ ஜனதோ" "ஹரி தும் ஹரோ" பாடல்களும் கேட்டன. பகவத் கீதை சுலோகங்களின் பாராயணமும் நடைபெற்றது.

பிர்லா மாளிகையில் காந்தி மகாத்மாவின் தேகம் இருந்த அறையில் இரவெல்லாம் இருபது பேர் மேற்படி பஜனைகளைப் பாடிக்கொண்டும், பகவத் கீதை பாராயணம் செய்துகொண்டும் இருந்தார்களாம். இதை ரேடியோவில் பேசியவர் சொன்னார்.

மேலும் அவர், "இதோ பண்டித ஜவாஹர்லால், ஸர்தார் வல்லபாய் பட்டேல் முதலியவர்கள் வந்துவிட்டார்கள். கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டனும் வந்திருக்கிறார். மகாத்மாவின் அந்திம யாத்திரையைப் பற்றித் தலைவர்கள் ஆலோசிக்கிறார்கள். வாசலில் ஜனத் திரள் ஏராளமாகக் கூடிவிட்டது" என்பதாகத் தெரிவித்தார். பிறகு ஒரு திறந்த மோட்டார் டிரக்கில் புஷ்ப சயனம் அமைத்து அதில் மகாத்மாவின் தேகத்தைக் கிடத்தியதைப் பற்றியும், ஜனங்கள் அப்போது அலறியது பற்றியும் கூறினார். "ஆயிற்று; இதோ மகாத்மாவின் அந்திம யாத்திரை ஆரம்பமாகிவிட்டது!" என்று அறிவித்தார். பிறகு, வழி நெடுக ஆங்காங்கு கண்ட காட்சிகளைச் சொல்லிக்கொண்டே வந்தார். பெருந் திரளான மக்கள் வழியெங்கும் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றதை விவரித்தார். இடை யிடையே சொல்ல முடியாத சோகக் குரலில் டில்லி ஜனங்கள் "பாபுஜி! மகாத்மாஜி!" என்று கதறியதும் ரேடியோவில் கேட்டது. "ஜவாஹர்லால்ஜி! எங்கள் பாபுஜியை எங்கே கொண்டு போகப் போகிறீர்கள்?" என்று சிலர் கதறினார்கள். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நாமும் கண் கலங்கிக் கண்ணீர் பெருக்கினோம்; கதறவும் கதறினோம்.

நாம் மட்டுந்தானா? இந்தியா தேசம் முழுவதிலும் ஒவ்வொரு ரேடியோவின் முன்னாலும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக உட்கார்ந்து மேற்படி விவரங்களைக் கேட்டார்கள்; அழுது பிரலாபித்தார்கள்.

உன் தங்கை பத்மா நடுவில் ஒரு தடவை என்ன சொன்னாள், நினைவு இருக்கிறதா? திடீரென்று அவள் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, "மகாத்மா காந்தி இறந்து போயிருக்கமாட்டார்; தூங்கிக்கொண் டிருப்பார். சாயங்காலம் நாலு மணிக்குத் திடீரென்று எழுந்து உட்காருவார். பக்கத்திலுள்ள ஜவாஹர்லாலைப் பார்த்து, ஆச்சரியத்துடன், 'க்யா ஹுவா?' என்று கேட்பார். எல்லாரும் சந்தோஷமாகத் திரும்பி விடுவார்கள். இல்லையா, மாமா?" என்று கேட்டாள். மாமா அதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், "ஐயோ, என் கண்ணே!" என்றார்.

ஆனால், பத்மா கண்மணி நினைத்தபடி நடக்கவில்லை. யமுனைக் கரையில் உள்ள 'ராஜகாட்' என்னுமிடத்தில் சந்தனக் கட்டைகள் அடுக்கிய சிதையில், மகாத்மாவின் உடலைக் கிடத்தியதுபற்றி ரேடியோக்காரர் சொன்னார். கணக்கிட முடியாத ஜனங்கள் நாலாபுறமும் கண்ணுக் கெட்டிய தூரம் கூடியிருப்பதையும் கூறினார். யாரோ ஒரு சாஸ்திரி மந்திரம் கோஷிப்பதையும், மகாத்மாவின் மூன்றாவது புதல்வர் ஸ்ரீ ராம் தாஸ் காந்தி தந்தையின் சிதைக்குத் தீ மூட்டியதையும் தெரிவித்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் தீயின் ஜுவாலை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதையும், பத்து லட்சம் ஜனங்கள் 'ஓ!' என்று கதறியதையும் விவரித்தார்.

அவ்வளவுதான்; அதற்கு மேலே என்ன சொல்ல இருக்கிறது? கேட்பதற்குத்தான் என்ன இருக்கிறது? காந்தி மகான் நம்மைப் பரிதவிக்க விட்டுவிட்டு வானுலகம் சென்றுவிட்டது நிச்சயமாக உண்மைதான்; சந்தேகப்பட இடம் இல்லை.

ஐந்தரை மணிக்கு ரேடியோவை நிறுத்திவிட்டு எல்லாரும் சென்று தலை முழுகினோம். ஏதோ கொஞ்சம் சாப்பிட்டோம். சாப்பிடுவதற்கு மனம் இடங்கொடுக்கவில்லைதான். ஆனாலும், நாம் பட்டினியிருந்து என்ன பயன்? மகாத்மா காந்தி திரும்பி வந்துவிடப் போகிறாரா?

தம்பி! வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நம்முடைய வீட்டிலே நடந்ததுபோலத்தான் இந்தியாவிலே கோடிக்கணக்கான குடும்பங்களில் நடந்தது. ரேடியோவில் நேரில் கேட்க முடியாதவர்கள் ரேடியோ கேட்டவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். மற்றும் பலர் பத்திரிகைகளைப் பார்த்துத் தெரிந்துகொண்டார்கள்.

மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கேட்டுப் பயங்கரமும் துயரமும் அடையாத பாவிகள் இந்தியாவிலே வெகு சிலரே இருந்திருப்பார்கள். அவர்கள் மனிதர்கள்

அல்ல; மனித உடல் படைத்த ராட்சதர்கள். கோடானு கோடி இந்திய மக்கள் தங்களுடைய உற்ற பந்து இறந்து போனால் அடையக்கூடிய துக்கத்தைக் காட்டிலும் அதிகமாகத் துக்கப்பட்டார்கள். "இனி இந்த தேசத்தின் கதி என்ன?" என்று பலர் கவலையும் பட்டார்கள்.

இந்தியாவிலே மட்டுந்தானா? உலகெங்குமுள்ள பிரமுகர்கள், பாமர மக்கள் அனைவரும் திகைத்திட்டார்கள்; துயரமுற்றார்கள். "மனித குலத்துக்கு மகத்தான நஷ்டம்" என்று சொல்லி வருந்தினார்கள்.

தம்பி! இப்படி உலகத்தை யெல்லாம் கலக்கச் செய்த துக்க சம்பவம் 1948-ம் வருஷம் ஜனவரி௴ 30௳ மாலை நிகழ்ந்தது. நீ உலகத்தில் தினந் தினம் எத்தனையோ மரணங்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. அதனாலெல்லாம் உலகம் துயரக் கடலில் மூழ்கி விடுகிறதா? இல்லையே? பின்னே, மகாத்மா காந்தியின் மரணம் மட்டும் இப்படி மனித குலத்தையே கலக்கிய காரணம் என்ன? இந்தக் காரணத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால், மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை நீ தெரிந்து கொள்ள வேண்டும். அவருடைய வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளையாவது நீ அவசியம் அறியவேண்டும். ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் மகாத்மாவின் வாழ்க்கைக் கதையைச் சொல்கிறேன். கவனமாகக் கேட்பாயல்லவா?.......ஆம்; கேட்பாய். "அதைவிட எனக்கு வேறு என்ன வேலை?" என்று சொல்கிறாய். சரி, சரி; இதோ ஆரம்பித்து விட்டேன்.

1. அன்னையும் பிதாவும்

தம்பி! பள்ளிக்கூடத்தில் நீ சரித்திர பாடங்கள் படிக்கிறாயல்லவா? சரித்திர பாடங்களில் பல தேதிகளை நெட்டுருச் செய்யும்படி உபாத்தியாயர்கள் சொல்கிறார்கள். சரித்திர பாட புத்தகத்தின் கடைசியில் ஐந்து பக்கம் நிறையத் தேதி அநுபந்தம் சேர்த்திருக்கிறது. வாரன் ஹேஸ்டிங்ஸ் காலம் முதல் ஒவ்வொரு வைஸ்ராயும் இந்தியாவுக்கு வந்த தேதியும் போன தேதியும் இரண்டு பக்கங்கள் நிறைய இருக்கின்றன. அவ்வளவு தேதிகளையும் நீ மனப்பாடம் செய்யவேண்டி யிருக்கிறது.

உண்மையில், அந்தத் தேதிகளை யெல்லாம் நீ நெட்டுருச் செய்யவேண்டிய அவசியமே இல்லை. புத்தகத்திலேதான் அச்சுப் போட்டிருக்கிறார்களே! வேண்டும்போது எடுத்துப் பார்த்துக் கொள்ளலாமே?

இந்திய சரித்திர பாடத்தில் சுமார் பதினைந்து தேதிகள் உனக்கு ஞாபகம் இருந்தால் போதும். தேதி என்றால், மாதமும் தினமும்கூட அல்ல. சுமாராக வருஷம் தெரிந்திருந்தால் போதும். எந்த நூற்றாண்டு என்பது தெரிந்தாலும் போதும்.

மகான் புத்தர் எந்தக் காலத்தவர் என்பது உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்புறம் அசோகர் காலமும் சந்திரகுப்த விக்ரமாதித்யர் காலமும் தெரிந்திருக்க வேண்டும். திருவள்ளுவர், மகேந்திர பல்லவர், ஹர்ஷவர்த்தனர், இராஜ ராஜ சோழர், சங்கரர், இராமானுஜர், அக்பர், சிவாஜி இவர்கள் வாழ்ந்த காலம் உனக்குத் தெரியவேண்டும்.

மேற்கூறிய தேதிகளுக்குப் பிற்பாடு உனக்கு முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டிய தேதி எது தெரியுமா? சொல்லுகிறேன், கேள்! கேட்டு, மனதில் மறக்க முடியாதபடி பதித்து வைத்துக்கொள்!

1869௵ அக்டோபர்௴ 2௳ உன் நினைவில் என்றென்றைக்கும் இருக்கவேண்டும்.

அந்தத் தேதியிலேதான் மாந்தருக்குள் தெய்வமான மகாத்மா காந்தி அவதரித்தார்.

தம்பி! நான் சொல்வதைத் தவறாக எண்ணிக் கொள்ளாதே! பிறக்கும்போதே காந்திஜி மகாத்மாவாகப் பிறந்துவிடவில்லை. உன்னையும் என்னையும் காட்டிலுள்ள எல்லாரையும்போல் அவரும் பிறந்தபோது சாதாரணக் குழந்தையாகத்தான் பிறந்தார். அப்படிப் பிறந்த குழந்தை மாநிலத்துக்கு ஒரு தலைவராகவும் மனித குலத்துக்கு ஒரு வழிகாட்டியாகவும் பிற்காலத்தில் ஆகப் போகிறது என்று அப்போது யாரும் எண்ணவில்லை; குழந்தையின் பெற்றோர்களும் அவ்விதம் நினைக்கவில்லை.

இந்தியா தேசத்தின் படத்தைப் பார்! குஜராத் எனப்படும் கூர்ஜரத்துக்கு மேலே கத்தியவார் என்று இருக்கிறதல்லவா?





இந்தப் பிரதேசத்திலேதான் முன்னொரு சமயம் 'ஸ்ரீ கிருஷ்ண பகவான்' வட மதுரை நகரை விட்டு வந்து துவாரகை என்னும் புதிய நகரை அமைத்துக் கொண்டார். எதற்காகத் தெரியுமா? ஸ்ரீ கிருஷ்ணன் மதுரையின் மன்னரா யிருந்தபோது ஓயாமல் பொல்லாத பகைவர்களுடன் யுத்தம் செய்ய வேண்டியிருந்தது. ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு யுத்தம் போதும் போதும் என்று ஆகிவிட்டது. "யுத்தமும் வேண்டாம்; மதுரை ராஜ்யமும் வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவான் தம்முடைய உற்றார் உறவினர், நண்பர்கள், பிரஜைகள், சேனா வீரர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு கத்தியவாருக்கு வந்து விட்டார்.

இப்படிச் செய்வதின் மூலமாகவாவது அந்தப் பகைவர்களின் மனதிலுள்ள துவேஷம் போகாதா, அவர்கள் நல்லவர்களாகிவிட மாட்டார்களா என்று நினைத்தே பகவான் அவ்விதம் செய்தார்.

கத்தியவார் கடற்கரையில் துவாரகை நகரைக் கட்டிக்கொண்டார். இதனாலேதான், துவாரகாபுரி ஆலயத்திலுள்ள கண்ண பெருமானுக்கு 'ரண சோட் நாதர்' என்ற திருநாமம் வழங்கிவருகிறது. (ரணம்: யுத்தம்; சோட்: விட்ட; நாதர்: பெருமான்.)

பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அதே கத்தியவார் பிரதேசத்திலேதான், "யுத்தம் வேண்டாம்! பகைமை வேண்டாம்!" என்று உபதேசித்த காந்தி மகானும் பிறந்தார். அவர் பிறந்த ஊருக்குப் போர்பந்தர் என்று பெயர். 'சுதாமாபுரி' என்ற பழைய பெயரும் அந்தப் பட்டணத்துக்கு உண்டு. 'சுதாமா' என்பது குசேலருக்கு இன்னொரு பெயர் என்பது உனக்கு நினைவிருக்கிறதல்லவா?

மகாத்மாவின் பெற்றோர்கள் 'பனியா' என்று சொல்லப்படும் வைசிய சாதியார். (காந்திஜிதான் சாதி குலப் பிறப்பென்னும் மாயைகளையெல்லாம் கடந்த மகாத்மா ஆயிற்றே! ஆகையினால்தான், காந்திஜியின் பெற்றோர் 'வைசிய சாதி' என்று சொன்னேன்.) வைசிய சாதி என்றாலும் காந்திஜியின் முன்னோர்கள் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டவர்கள் அல்ல. கத்தியவாரில் அநேக சுதேச சமஸ்தானங்கள் உண்டு. காந்திஜியின் பாட்டனாரும் அவருக்கு முன்னால் மூன்று தலைமுறையினரும் சமஸ்தான மன்னர்களுக்கு முதன் மந்திரிகளாயிருந்து வந்தார்கள்.

காந்திஜியின் பாட்டனாரான ஸ்ரீ உத்தம சந்திர காந்தி என்பவர் ஒரு தீர புருஷர். போர்பந்தர் சமஸ்தானத்தில் அவர் திவான் வேலை பார்த்து வந்தபோது அவரைக் கவிழ்த்துவிடச் சிலர் சதி செய்தார்கள். இதை அறிந்த ஸ்ரீ உத்தம சந்திரர் பக்கத்திலுள்ள ஜூனாகாத் சமஸ்தானத்தில் அடைக்கலம் புகுந்தார். (சில மாதங்களுக்கு முன்பு தினப் பத்திரிகைகளில் ஜூனாகாத்தின் பெயர் அதிகமாக அடிபட்டதல்லவா? அந்த ஜூனாகாத் சமஸ்தானந்தான்.) ஜூனாகாத்தின் அதிபதியான முஸ்லிம் நவாப்பின் தர்பாரை ஸ்ரீ உத்தமசந்திரர் அடைந்ததும், நவாப்புக்கு இடது கையினால் சலாம் செய்தாராம். இந்த மரியாதைக் குறைவான செயலுக்குக் காரணம் கேட்டபோது, "என்னுடைய வலது கை ஏற்கெனவே போர்பந்தரின் ஊழியத்துக்கு அர்ப்பணமாகியிருக்கிறதே!" என்று பதில் சொன்னாராம். இந்தப் பதிலைக் கேட்ட ஜூனாகத் நவாப், "இவர் எவ்வளவு உத்தமமான மனிதர்! எப்பேர்ப்பட்ட சத்திய சந்தர்!" என்று எண்ணி மகிழ்ந்தாராம்.

உத்தமசந்திரருக்கு ஆறு புதல்வர்கள். இவர்களில் ஐந்தாவது புதல்வர் கரம் சந்திர காந்தி. பெயரைச் சுருக்கிக் 'கபா காந்தி' என்றும் அழைப்பதுண்டு. போர்பந்தர், வங்கனேர், இராஜகோட்டை ஆகிய சமஸ்தானங்களில் ஸ்ரீ கபாகாந்தி திவான் வேலை பார்த்தார். கத்தியவாரில் சமஸ்தானங்கள் நூற்றுக் கணக்கில் உண்டு. (அவையெல்லாம் ஒரு மாதத்துக்கு முன்னால் ஒன்று சேர்ந்து ஒரு தலைமை அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பது பற்றிப் பத்திரிகைகளில் வந்த செய்தி நினைவிருக்கிறதா?) அவற்றை ஆண்ட மன்னர்களுக்குள்ளேயும், மன்னர்களின் உறவினர் — இனத்தாருக்கு உள்ளேயும் அடிக்கடி தகராறுகள் ஏற்படும். இந்தத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்காக "இராஜஸ்தான் கோர்ட்" என்று ஒரு நீதி மன்றம் அந்தக் காலத்தில் இருந்தது. அந்த நீதி மன்றத்தில் ஸ்ரீ கபா காந்தி ஒரு நீதிபதியாகப் பதவி வகித்தார்.

ஸ்ரீ கபா காந்தி உண்மையாளர்; தைரியமும் நாணயமும் உடையவர்; பணத்தைப் பெரிதாகக் கருதாதவர். நடுநிலைமை பிறழாத நியாயவான் என்ற புகழ் அவ

ருக்கு ஏற்பட்டிருந்தது. அவர் பள்ளிக்கூடத்தில் படித்தது ஐந்தாவது வகுப்பு வரையில்தான். ஆனால் இயற்கை அறிவினாலும் உலக அநுபவத்தினாலும் மிகச் சிக்கலான பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் சக்தி பெற்றிருந்தார். நூற்றுக்கணக்கான மனிதர்களை வைத்து நடத்தும் நிர்வாகத் திறமையும் அவருக்கு இருந்தது.

இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தானங்களை மேற்பார்வை செய்யப் பிரிட்டிஷ் சர்க்கார் சென்ற வருஷம் வரையில் 'பொலிடிகல் ஏஜெண்டு' என்னும் உத்தியோகஸ்தர்களை அமர்த்திக் கொண்டு வந்தார்கள். ஒரு சமயம் ஒரு 'பொலிடிகல் ஏஜெண்டு' இராஜ கோட்டை மன்னரைப் பற்றிச் சிறிது அவமரியாதையாகப் பேசினாராம். உடனே ஸ்ரீ காபா காந்தி குறுக்கிட்டு ஆட்சேபித்தாராம். பொலிடிகல் ஏஜெண்ட் துரை அப்பொழுதெல்லாம் சர்வ வல்லமை படைத்திருந்த பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதி யல்லவா? துரைக்குக் கோபம் வந்து விட்டதாம். ஸ்ரீ காபா காந்தி தம்மிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று சொன்னாராம். ஸ்ரீ காபா காந்தி, "முடியாது" என்றாராம். அவரைத் துரை காவலில் வைத்தாராம். அப்படியும் ஸ்ரீ காபா காந்தி மன்னிப்புக் கேட்க இணங்கவில்லையாம். சில மணி நேரத்துக்குப் பிறகு பொலிடிகல் ஏஜெண்ட் அவரை விடுதலை செய்து விட்டாராம்.

தந்தையிடம் இருந்த மேற் கூறிய உத்தம குணங்கள் எல்லாம் புதல்வரிடம் ஒன்றுக்கு ஆயிரம் மடங்காகப் பெருகிப் பிரகாசித்ததை நாம் அறிந்திருக்கிறோம்.

ஸ்ரீ காபா காந்தி மூன்று தடவை கலியாணம் செய்து கொண்டு மூன்று மனைவிகளும் காலமாகி விட்டார்கள். எனவே, நாலாவது முறையாக ஸ்ரீமதி புத்லி பாய் என்னும் கன்னிகையை அவர் மணந்து கொண்டார். இவ்விதம் நாற்பது வயதுக்கு மேல் தம் தந்தை நாலாவது முறை கலியாணம் செய்து கொண்டது மகாத்மாவுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பதை அவர் எழுதிய சுயசரிதையிலிருந்து நாம் அறிகிறோம்.

ஆனாலும் ஸ்ரீ காபா காந்தி நாலாவது தடவையும் கலியாணம் செய்து கொண்டது பற்றி நீயும் நானும் மகிழ்ச்சி யடைய வேண்டும். இந்தியா தேசமும் இந்த உலகம் முழுவதுமே அதைக் குறித்துச் சந்தோஷப்பட வேண்டும். ஏனெனில், ஸ்ரீ காபா காந்தியின் நாலாவது கலியாணத்தின் பயனாகவே மகாத்மா இந்த உலகில் அவதரித்தார். ஸ்ரீமதி புத்லி பாயின் நாலாவது கடைக்குட்டிக் குழந்தை ஸ்ரீ மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி.

தமது அன்னையின் சிறந்த குணங்களைப் பற்றி மகாத்மாவே தம்முடைய சுய சரிதத்தில் சொல்லி யிருக்கிறார்.

ஆமாம், தம்பி! மகாத்மா காந்தி தம்முடைய சரித்திரத்தைத் தாமே எழுதியிருக்கிறார். ஆனால் அதற்குச் சுய சரிதம் என்று பெயர் கொடுக்காமல் 'சத்திய சோதனை' என்று பெயர் கொடுத்திருக்கிறார். இந்த அரிய புத்தகம் ஆங்கிலத்திலும் இந்தியாவிலுள்ள முக்கியமான பாஷைகள் எல்லாவற்றிலும் வெளியாகியிருக்கிறது. தமிழிலும் வந்திருக்கிறது. நீ சற்றுப் பெரியவன் ஆனதும் அந்தப் புத்தகத்தை வாங்கிப் படிக்கலாம்.

பெரிய மகான்களுடைய வாழ்க்கையைப் பற்றி நாளடைவில் கற்பனைக் கதைகள் பல உண்டாகிச் சேர்ந்து விடுவது வழக்கம். மகாத்மா தம்முடைய சரிதையைத் தாமே எழுதி யிருக்கிறபடியால் அவரைப் பற்றிக் கற்பனை கதைகள் ஏற்பட இடமில்லாமற் போய்விட்டது. ஆனால், என்ன துரதிர்ஷ்டம்! 1920-ம் வருஷத்தோடு மகாத்மா தமது சுய சரிதத்தை நிறுத்திவிட்டிருக்கிறார். அதற்குப் பிறகு எத்தனை எத்தனை அற்புதச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன! இன்னும் சில காலம் அவர் வாழ்ந்திருந்து இந்தியா சுதந்திரம் அடைந்த 1947 ஆகஸ்டு 15உ வரையில் தமது சரிதத்தை எழுதிப் பூர்த்தி செய்திருக்கக் கூடாதா? அது முடியாதபடி ஒரு கொடும் பாதகன் அவரைக் கொலை செய்து விட்டானே?

சரிதையை விட்ட இடத்துக்கு மறுபடியும் போகலாம். காந்தி மகான் தமது தாயாரைப் பற்றிச் சொல்லி யிருப்பதை அப்படியே பெயர்த்து எழுதுகிறேன்:—

"அவர் பெரிதும் சமயப்பற்றுக் கொண்டவர். தினசரி தெய்வப் பிரார்த்தனை செய்யாமல் அவர் உணவு கொள்ள மாட்டார். தினந்தோறும் விஷ்ணு கோவிலுக்குச் சென்று வருவார். எனக்கு நினைவு தெரிந்த பின்னர் அவர் ஒரு வருஷமாவது சாதுர் மாஸ்ய விரதம் அனுஷ்டிக்கத் தவறியதில்லை. மிகக் கடினமான நோன்புகளை அவர் மேற்கொண்டு நிறைவேற்றி வந்

தார். உடல் நோய் காரணமாகவும் அவர் விரதத்தைக் கைவிடுவதில்லை. ஒருமுறை சாந்திராயண விரதத்தின்போது கடுமையான நோய் வந்தும், அவர் விரதத்தை விடாமல் நடத்தியது எனக்கு நினைவிருக்கிறது. இரண்டு மூன்று வேளை சேர்ந்தாற்போல் உபவாசமிருத்தல் அவருக்குச் சர்வ சாதாரணம். சாதுர் மாஸ்யத்தில் அவர் தினம் ஒரு முறைதான் உணவு கொள்வார். இது போதாதென்று ஒரு சாதுர் மாஸ்யத்தில், ஒரு நாள் விட்டு ஒரு நாள் பூரண உபவாசமிருந்து வந்தார். மற்றொரு சாதுர் மாஸ்யத்தின்போது தினம் சூரிய தரிசனம் செய்யாமல் சாப்பிடுவதில்லையென்று அவர் விரதம் எடுத்துக் கொண்டார். நானும் மற்றக் குழந்தைகளும் தெருவில் நின்று கொண்டு சூரியன் எப்போது மேகக் கூட்டங்களினின்றும் வெளி வரப் போகிறதென்று காத்துக் கொண்டிருப்போம். மழை காலத்தில் சில தினங்களில் கதிரவன் தரிசனம் அளிக்கக் கருணை செய்வதில்லையென்பது எல்லோருக்கும் தெரியும். அத்தகைய நாட்களில் சூரியன் அருமையாக வெளிவரும்போது ஓட்டமாக ஓடி அன்னையிடம் தெரிவிப்போம். ஆனால் அவர் ஓடி வந்து பார்ப்பதற்குள் சூரியன் மறைந்து விடுவான். 'அதனாலென்ன மோசம்? இன்று நான் சாப்பிடுவது பகவானுக்கு விருப்பமில்லை!' என்று கூறிக்கொண்டு மலர்ந்த முகத்துடன் மீண்டும் வீட்டு வேலையைக் கவனிக்கத் தொடங்குவார்.''

(தொடரும்)

காந்தி மகான் திருவாக்கு - 1

சிறு குழந்தைகளோ, இளைஞர்களோ, அல்லது வயது முதிர்ந்தவர்களோ சாகும்போது நாம் ஏன் மனமுடைந்து போகவேண்டும்? இந்த உலகத்தில் ஒவ்வொரு நிமிஷமும் யாராவது செத்துப் போகாமல் இருப்பதில்லை; யாராவது பிறக்காமல் இருப்பதும் இல்லை. பிறப்பைக் கண்டு பேரானந்தம் அடைவதும் மரணத்தைக் கண்டு பிரலாபிப்பதும் மூடத்தனம் என்பதை நாம் உணர வேண்டும். ஆன்மாவில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு (எந்த ஹிந்து, முஸல்மானுக்குத்தான் அதில் நம்பிக்கை இல்லை?) ஆன்மா ஒருபோதும் சாவதில்லை என்பது தெரியும். உயிரோடு இருப்பவர்களுடைய ஆன்மாவும் செத்துப் போனவர்களுடைய ஆன்மாவும் ஒன்றேயாகும். சிருஷ்டியும் சங்காரமும் ஊழி காலமாக இடைவிடாமல் நடைபெற்று வருகின்றன. இதில் குதூகலம் அடைவதற்கோ துக்கப்படுவதற்கோ ஒன்றும் இல்லை. நம்முடைய நாட்டு மக்களை மாத்திரம் நமக்குச் சொந்தமாக வைத்துக் கொண்டு, இந்தத் தேசத்தில் நடக்கும் ஜனனங்களை மாத்திரம் நம்முடைய சொந்தக் குடும்பத்தில் நடக்கும் ஜனனங்களாக வைத்துக் கொண்டாலுங்கூட, எத்தனை பிறப்புக்களைத்தான் நாம் கொண்டாடுவது? அல்லது, இந்நாட்டில் நடக்கும் மரணங்களுக்கெல்லாம் நாம் அழுவதானால், நாம் எப்போதும் அழுது கொண்டே இருக்க வேண்டியதாகத்தான் நேரும்.

பாரததேசம் வேதாந்திகள் வாழும் பூமி என்பதாகப் பலர் சொல்லுகிறார்கள். இருந்தபோதிலும், மரணத்தின்போது நம்மைப்போல வேறு எந்த நாட்டு மக்களும் இத்தகைய நிர்க்கதியான நிலைமையை அடைவதில்லை; அதிலும், இந்தியாவில் ஹிந்துக்களைப்போல வேறு எந்த வகுப்பு மக்களும் இதை வெளியே அதிகமாகக் காட்டிக் கொள்வதில்லை. ஒரு குழந்தை பிறந்து விட்டால் போதும், மற்றவர்கள் பார்த்துக் கேலி செய்யக்கூடிய அளவுக்கு நாம் ஒரே ஆனந்தத்திலும் குதூகலத்திலும் மூழ்கிப் போகிறோம். யாராவது ஒருவர் செத்துப் போனால் பலமான அழுகைப் பிரலாபத்தை எழுப்பிப் பக்கத்து வீட்டுக்காரர்கள் இரவில் தூங்க முடியாதபடி அவர்களை வதைக்கிறோம்.

நாம் சுயராஜ்யம் அடைய விரும்பினால், அல்லது சுயராஜ்யம் அடைந்த பிறகு நாம் பெற்ற அந்தச் சுயராஜ்யத்தைக் கண்டு பெருமைப்பட வேண்டுமானால், மரண பயத்தைப் பூரணமாக ஒழிக்க வேண்டும். — யங் இந்தியா : 13-10-1921.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

202. அடடா, என்னத்தைச் செய்து விட்டாய்!

வாலி ஒரு வீரன், நேர்மையில் நிற்பவன். ராமனை அவனுடைய லக்ஷ்ய புருஷனாக மனசில் வைத்திருந்தான். ராமபாணத்தைப் பார்த்த உடன் 'இவ்வளவுதானா நம்முடைய லக்ஷ்ய புருஷனுடைய காரியம்!' என்று நாணத்துக்குள்ளானான். சிரித்தான். மறுபடியும் வெட்கிப் போனான். சிறிது நேரம் கழித்துப் பிரலாபிக்கிறான்: "ராஜாவே நீதியினின்று தவறிவிட்டான். அப்படியானால் நீதி வரம்பில்லாத கேடானவர்கள் செயல் எப்படி இருக்கும்" என்று சொல்லவா வேண்டும்?

இறைதிறம் பினால்! என் னே
இழிந்துளோர் இயற்கை? என் பால்
முறைதிறம் பினால்' என் று
மொழிகின்ற வாயான்முன் னர்,—
மறைதிறம் பாதவாய் மை
மன்னர்க்கு மனுவிற்சொல் லும்
துறைதிறம் பாமல்க்காக் கத்
தோன்றினான் தோன்றி னால்!

[மொழிகின்ற வாயான் முன்னர்: வாலியினுடைய வாய், பேசிக் கொண்டிருக்கிறது. அப்போது அவன் முன்பாக—தோன்றினானால்: மறைதிறம்பாத வாய்மை மன்னர்க்கு: நீதி நூலை விட்டு வழுவாத சத்திய தர்மத்தைக் கைக் கொண்ட அரசர்களுக்காகவே; மனுவிற் சொல்லும் துறைதிறம்பாமல் காக்கத் தோன்றினான்: மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லும் நீதிகளைப் பழுது படாமல் காக்க அவதரித்தவனான ராமமூர்த்தி; தோன்றினால்: வாலி முன் வந்து தோன்றினான்.]

∴

புதருக்குள் நின்ற ராமன் வாலியின் மார்பிலிருந்து ரத்தம் சொட்டுவதைப் பார்த்தான். சுக்கிரீவன் மூர்ச்சித்து விழுவதையும் பார்த்தான். தன்னைப் பற்றி வாலி சொல்லுகிற வார்த்தைகளும் காதில் விழுந்தன. 'அடடா! என்ன காரியத்தைச் செய்து விட்டோம்!' என்று மனம் நொந்தவனாய்ப் புதரை விட்டு வெளியே வந்து புலம்பிக் கொண்டிருக்கிற வாலியை நோக்கி நடந்து போகிறான் ராமன்.

ராமன் வருவதை வாலியும் பார்த்துக் கொண்டான். ராமனுடைய உயர்ந்த குணங்களை அனுபவித்த வாலிக்கு ராமன் எப்படிக் காட்சி அளிக்கிறான் பாருங்கள்!

கண்ணுற்றான் வாலி, நீ லக்
கார்முகில் கமலம்பூத் து
மண்ணுற்று வரிவிலேந் தி
வருபெற்றி யானை! வா னம்
புண்ணுற்ற தனையசோ ரி
பொழிதர விம்முவான் 'என்
என்னுற்றாய் என்செய்தாய்!'
என் (று)
ஏங்கினன் இயம்பலுற் றான்.

[கண்ணுற்றான் வாலி: வாலி பார்த்தான்; நீலக் கார்முகில் கமலம் பூத்து, மண்ணுற்று வரிவிலேந்தி வருபெற்றியானை: இருண்ட நீல மேகம் ஒன்று செந்தாமரைகளைத் தன்னிடத்தில் புஷ்பித்துக் கொண்டு அப்படியே பூமிமேல் இறங்கி ஒரு வில்லையும் கையில் ஏந்தி நடந்து வருவதுபோல் இருந்தது ராமனது திருமேனி. அந்தத் திருமேனியைக் கண்டான் வாலி; வானம் புண்ணுற்றது அனைய சோரி பொழிதர விம்முவான்: வானமே புண்பட்டு இரத்தம் பொழிந்தது போல் வாலியின் மேனியிலிருந்து இரத்தம் பொழிகிறது. இந்த நிலையில் ராமனைப் பார்த்துப் பரிவுடனேயே பேசினான்.]

குறிப்பு: ராமனது நீல மயமான திருமேனியில் வாலி ஈடுபடுகிறான் என்பது தெரிகிறது. காரணம், ராமனது திவ்ய குணங்களில் முன்னமேயே ஈடுபட்டிருந்தது மாத்திரம் அல்ல. ராமனது முகத்தில் பரிவும் துன்பமும் ததும்பியிருந்ததை வாலி பார்த்துக் கொண்டதுதான்.



1946-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் மகாத்மா மன முவந்து தமிழகத்துக்கு விஜயம் செய்தார்.

●

பழனியில் கூடியிருந்த மாபெரும் ஜனக் கூட்டம்.





திருச்சிறாப்பள்ளி ஜங்ஷனில் பூர் சக்கரக் குடையின் கீழ் நின்று மகாத்மா பேசினார்.

●

தமிழ் நாட்டில் சுமார் ஐம்பது லட்சம் ஜனங்கள் காந்தி மகானைத் தரிசித்துப் புனித மடைந்தார்கள்.



காந்தி அஞ்சலி — 2

நம்புவார்களா?

"காந்திஜி வெளி அதிகாரத்தின் ஆதரவு எதுவும் இன்றி மக்களுக்குத் தலைவராக வந்தவர். சூதுவாதுகளும் தந்திரங்களும் இன்றித் தம்முடைய சொந்த ஒழுக்கத்தின் சக்தியையே துணையாகக் கொண்டு அரசியலில் வெற்றி கண்டவர். என்றும் எக்காலத்தும் பலாத்காரத்தைப் புறக்கணித்த வீரர். விவேகமும் தன்னடக்கமும் மிகுந்து, உறுதியும் அசைக்க முடியாத மன வலிமையும் நிறைந்து, மக்களின் க்ஷேமத்துக்காகத் தம்முடைய சக்தி முழுவதையும் அர்ப்பணம் செய்தவர். ஐரோப்பாவின் மிருக பலத்தை எதிர்த்து வெற்றி பெற்று எக்காலத்தும் உன்னத ஸ்தானத்தை அடைந்தவர்.

இத்தகைய ஒருவர் மானிட வடிவத்திலே வந்தார் என்றும் இந்தப் பூவுலகத்தில் நடந்தார் என்றும் இனிமேல் வரப்போகும் மானிட சந்ததிகள் நம்புவதே கஷ்டந்தான்!" —ஐன்ஸ்டைன்


காந்திமகான் திருவாக்கு – 2

●

இந்தியா வாளாயுதத்தைக் கைக்கொள்ளுமானால், அதாவது பலாத்காரத்தில் இறங்குமானால், ஒருவேளை அதற்குத் தாற்காலிக வெற்றி கிடைக்கலாம். ஆனால், அப்புறம் இந்தியா தேசம் என் இதயத்தின் ஆசைக்கும் பெருமைக்கும் உகந்த நாடாக இராது. நான் இந்தியாவுடன் ஐக்கியப்பட்டிருக்கிறேன்; இந்தியாவுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தியா உலகத்துக்குப் போதிக்க வேண்டிய செய்தி ஒன்று இருக்கிறது என்று பரிபூரணமாக நம்புகிறேன். பாரதநாடு ஐரோப்பாவைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றக் கூடாது. இந்தியா வாளேந்துவது என்னும் பலாத்காரத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ளுமானால், அது எனக்குச் சோதனைக் காலமாக இருக்கும். என்னுடைய மதத்துக்குப் பூகோள வரம்புகள் எதுவும் இல்லை. அஹிம்சையில் எனக்குள்ள குன்றாத நம்பிக்கை, இந்தியாமீது நான் வைத்திருக்கும் அன்பையும் கடந்ததாகும். அஹிம்சையை ஹிந்து மதத்தின் ஆணி வேராக நான் மதிக்கிறேன். அஹிம்சா தர்மத்தின் மூலம் இந்தியாவுக்குத் தொண்டு செய்வதற்காகவே என்னுடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறேன்.

— யங் இந்தியா : 1920 ஆகஸ்ட் 11

“அவர்கள் தேனீரை விரும்பிய போதிலும் நல்ல டீ என்ன வென்பது அவர்களுக்குத் தெரியாது. எப்படித்தெரியும்? அவர்கள் பாலை பாண்டத்திலேயே



கலந்து, கோப்பையில் ஊற்றுமுன் பாகவே கெடுத்து விடுகின்றனர். நல்ல டீ தயாரிக்க, பாலை பாண்டத்தில் கலக்கக்கூடாது; கோப்பையிலேயே சேர்த்துக்கொள்ள வேண்டும்”

கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்ன வென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்கவிஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிகச்செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளைப் பின்பற்றினால் போதும். உங்கள் பணத்துக்கு முழு மதிப்பு பெறவும், தேயிலைபானம் நறுமணம் ததும்பியிருக்கவும், இவ்விதிகளை உங்கள் மனதில் பதிய வைத்து, எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

ஐந்து சுலபமான விதிகள்



டீ

பழைய வேலைக்காரன்



ரவீந்திரநாத் டாகூர்

என் வீட்டுக்காரி எப்பொழுது பார்த்தாலும் முகத்தைச் சிணுங்கிக் கொள்ளுகிறாள். வேலைக்காரன் வீட்டுக்குப் போய் விட்டால், சிற்சில சமயம் நானும் அவனுடைய திட்டுக்கும் வசவுக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. ஏதாவது ஒரு சாமான் கெட்டு விட்டால் 'உங்கள் வேலைக்காரன் கிருஷ்ணன் இருக்கிறானே, அவன்தான் எடுத்துக் கொண்டு போயிருக்க வேண்டும். இங்கே வேறு யார் திருட்டுப் பயல் வரப்போகிறான்?' என்று அவள் அவனைத்தான் குறை கூறுவாள்.

சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் நானும் அவனைத் திட்டுகிறேன்; வைகிறேன். ஆனால் அந்த அயோக்கியப் பயல் எதையுமே காதில் போட்டுக் கொள்ளுவதில்லை; எதையுமே அவன் பொருட்படுத்துவதும் இல்லை. அவனுக்கு வசவு கிடைப்பது போலச் சாப்பாடு கிடைக்குமோ, கிடைக்காதோ! எனக்குத் தெரியாது. ஏதாவது வேலையிருக்கும் பொழுது "அடே, முட்டாள்! எங்கேடா தொலைந்து விட்டாய்?" என்று நான் கூப்பிட்டுப் பார்ப்பது உண்டு. வீட்டையே சல்லடை போட்டுச் சலித்து அவனைத் தேடிக்கூடப் பார்ப்பதுண்டு. ஆனால் அவன் கண்களில் பட்டால்தானே? ஏதாவது ஒரு சாமானை அவனிடம் கொடுத்தால், அதை உடைத்து உருப்படியில்லாமல் செய்து விடுவான். ஏதாவது நான்கைந்து வஸ்துக்களை அவனிடம் கொடுத்தால், ஒன்றுதான் நம் கைக்கு வந்து சேரும். மத்தியானம் ஆயிற்றோ இல்லையோ, எங்கேயாவது ஒரு மூலையில் மாடுபோல இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு படுத்துக் குறட்டைவிட ஆரம்பித்துவிடுவான். 'ஏண்டா இப்படிச் செய்தாய்?' என்று கடிந்து கொண்டாலோ, திட்டினாலோ கதவோரத்தில் கூனிக் குறுகிக்கொண்டு நின்ற வண்ணம் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரிப்பான். அவனைக் கண்டாலே எனக்கு எரிச்சல் எரிச்சலாக வரும். இருந்தாலும் அந்த மானங்கெட்டவனிடத்தில் எனக்கு ஒரு அபிமானம். அவனை வீட்டை விட்டு வெளியேற்ற மனம் வருவதேயில்லை. என்ன இருந்தாலும் அவன் வெகு நாளைய வேலைக்காரன் அல்லவா!

ஆனால் நம் எசமானியம்மாள் இருக்கிறாளே, அவள் முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு, "இனிமேல் என்னால் பொறுக்க முடியாது. பொறுத்தது போதும். உங்கள் வீட்டை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் வேலைக்காரனும், நீங்களும்! அந்தப் போக்கிரி ஏதாவது ஒரு சாமானை வீட்டில் இருக்கவிட்டால்தானே! அவனிருக்கிற இடத்தில் பணம் காசு எங்கேயோ இறக்கை முளைத்துப் பறந்துவிடுகிறது! உங்களுக்கென்னடாவென்றால், இவ்வளவு பெரிய உலகத்தில் அவனை விட்டால் வேறு வேலைக்காரன் அகப்படவில்லை!" என்று என்மீது எரிந்து விழுகிறாள்.

நான் ஒரு நாள் கோபம் தாளாமல் கிருஷ்ணனின் காதைப் பிடித்துத் திருகி, "காலிப்பயலே! நீ வேலை பார்த்தது போதும்; இந்த க்ஷணமே இந்த வீட்டை விட்டு வெளியே போ!" என்று சீறி விழுந்தேன்.

கிருஷ்ணன் வாய்திறந்து பதில் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு தயங்கித் தயங்கி வெளியே போய்விட்டான். நானும் மனதுக்குள், 'தொலைந்தது பீடை! போனவரையில் நமக்கு க்ஷேம காலந்தான்' என்று எண்ணிக்கொண்டேன். ஆனால் மறு நாள் காலையில் எழுந்ததும் எழுந்திருக்காததுமாக அவன் முகத்தில்தான் விழிக்க நேரிட்டது. அவன் சிரித்த முகத்துடன் என் எதிரே வந்து நின்றுகொண்டிருந்தான். அவன் முகத்தில் வருத்தமோ, கவலையோ, குறையோ எதுவுமே தென்படவில்லை. அடித்து வெளியே துரத்தின பின்பும் அவன் வெளியே போகவில்லை; மறுபடியும் உள்ளே நுழைந்து விட்டான். என்ன செய்வது? அவன் பழைய வேலைக்காரன் ஆயிற்றே!

இந்த வருஷம் தரகு வியாபாரத்தில் எனக்கு நல்ல லாபம் கிடைத்திருந்தது. 'மதுரை — பிருந்தாவனம் முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போய் வந்தால் என்ன?' என்று எண்ணினேன். குடும்பமனைத்தும் அதற்குத் தயாராகி விட்டது. ஆனால் வீட்டுக்காரியைச் சம்மதிக்க

வைப்பதுதான் பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது. ஆனால் அவன் ஒரு பெரிய நிபந்தனை விதித்து விட்டான். அந்த நிபந்தனை என்னவென்றால், 'அந்தக் காலாடிப் பயல் கிருஷ்ணன் நம்முடன் வரக் கூடாது' என்பதுதான்! அவன் வந்தால் பிரயாணத்தில் நிம்மதியே இராது என்பது அவனுடைய அழுத்தமான அபிப்பிராயம். ஆகவே நானும் 'சரி அவன் வரவேண்டாம். நவீன் சந்திரனை அழைத்துப் போவோம்' என்று ஒப்புக் கொண்டேன்.

பிரயாணத்துக்கு வேண்டிய மூட்டை முடிச்சுக்கள் கட்டப்பட்டன. ஸ்டேஷனுக்கும் போய்ச் சேர்ந்தோம். வண்டி வந்தது; ஏறினோம்; வண்டியும் புறப்பட்டது. பர்த்வான் ஜங்ஷனில் வண்டி நின்றதுதான் தாமதம், வேலைக்காரக் கிருஷ்ணன் இறங்கி 'ஹுக்கா'வுக்காகப் பிளாட்பாரத்தில் வளைய வளைய வந்து கொண்டிருந்தான். நான் 'அட கர்மமே!' என்று தலையில் அடித்துக் கொண்டேன். பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு அல்லவா! நான் திட்டத் திட்ட அவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. 'என்ன இருந்தாலும் அந்தத் தறுதலை நம் பழைய வேலைக்காரன்தானே!' என்று மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டேன்.

அதற்குப் பிறகு எப்படியோ மதுரையிலிருந்து பிருந்தாவனத்துக்குச் சென்றோம். பிருந்தாவனம் பகவான் கிருஷ்ணன் 'ராஸலீலை' புரிந்த இடம் அல்லவா! 'பண்டா'க்கள் என்னைச் சுற்றி ஈபோல மொய்த்து விட்டனர். வழியில் நான்கைந்து யாத்திரிகர்களுடன் நெருங்கிப் பழக நேர்ந்தது. எல்லாரும் சேர்ந்து ஒரு தர்ம சாலையில் தங்கினோம். 'ஆனந்தமாகப் பொழுது போகும்' என்றும் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அங்கே கண்ணனோ, கோபியரோ காட்சியளிக்கவில்லை! பிருந்தாவனத்தை முழுவதும் பெரியம்மைதான் ஆட்கொண்டிருந்தாள். என்னுடலிலும் அந்த அம்மைதான் ஆதிக்கியத்தைச் செலுத்தினள். கூடவந்திருந்தவர்கள் அனைவரும் கனவைப் போல மறைந்து விட்டனர். 'நம் உயிர் இங்கேயே போய் விடும்' என்றும் எனக்குத் தோன்றிற்று.

நான் பரிவும் இரக்கமும் தொனிக்கும் குரலில், "டேய் கிருஷ்ணா, சற்று என் அருகில் வந்து உட்காரேன்!" என்றேன். அந்தச் சமயத்தில் அவன்தான் எனக்கு உறுதுணையாகத் தோற்ற மளித்தான். அல்லும் பகலும் என் கட்டிலை விட்டு அகலவே மாட்டான். என்ன இருந்தாலும் அவன் குடும்பத்தில் தொன்று தொட்ட நாளாய் வேலை பார்ப்பவன் அல்லவா!

கிருஷ்ணன் எனக்குச் சிசுருஷை செய்வதிலே தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் மறந்தான் என்று சொன்னால் மிகையாகாது. அவன் உறங்கவும் இல்லை; உண்ணவும் இல்லை. பசியை அவன் ஒரு பொருட்டாக எண்ணினால் தானே! அடிக்கடி அவன் "எஜமான், கவலைப்படாதிங்க! சீக்கிரமே உங்கள் உடம்பு குணம் அடைந்து விடும். நாம் எல்லாரும் சந்தோஷமாக ஊருக்குத் திரும்பிப் போகலாமுங்க!" என்று சொல்லி என்னைத் தேற்றி வந்தான்.

அவன் ஊழியத்தின் பலனாக நான் சீக்கிரம் குணமடைந்தேன். ஆனால் அவனுக்கு ஜுரம் வந்து விட்டது. இரண்டு நாள் அவன் பிரக்ஞையற்றுக் கிடந்தான். பிறகு மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான்!

இன்றுவரை நான் அவனை வெளியேற்ற விரும்பிக் கொண்டிருந்தேன். ஆனால் இன்று அவனே என்னை விட்டு விட்டு வெளியேறி விட்டான். க்ஷேத்திராடனத்தை முடித்துக் கொண்டு நான் வீட்டுக்குத் திரும்பினேன். ஆனால் இந்தத் தடவை பழைய வேலைக்காரன் என்னுடன் திரும்பி வரவில்லை.

('அகஸ்யம்' மொழிபெயர்ப்பு.)



தந்திரம் பலிக்கவில்லை!

எஸ்.வி.எஸ்.

"ஏன்னா! வாசல்லே எவனோ பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நிற்கிறானே, யாருன்னு பார்த்தேளா? ஒரே தடியாய் பேப்பர் படிக்கிறதிலேயே மூழ்கி யிருக்கேளே!" என்றாள் என் மனைவி உள்ளே யிருந்தபடி.

நான் பேப்பரைத் தாழ்த்திக் கொண்டு, தலை நிமிர்ந்து பார்த்தேன். தாடியும் மீசையும் வளர்ந்த ஒருவன் வாசலில் நின்று கொண்டு எதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான். நான் சற்றுக் கூர்ந்து கவனித்த போது, "ஆமாம், நான் இன்றைக்குப் பேந்தப் பேந்த விழிக்கிறேன். ஆனால் என்னை இந்தக் கதிக்குக் கொண்டு வந்தது இந்த விழிகள் தான்!" என்று சொல்வது என் காதில் விழுந்தது.

நான் ஒருவேளை பைத்தியக்காரனோ என்று நினைத்து, "டேய்! யாருடா நீ?" என்றேன்.

"யாருமில்லேங்க! பசியா யிருக்குது. ஒரு வாய்ச்சோறு இருந்தால் போடுங்க!"

"அடியே, இந்தப் பிச்சைக்காரனுக்குச் சோறு இருந்தால் போடு" என்றேன்.

"சாமி! நான் பிச்சைக்காரன் அல்ல!"

"பின்னே என்ன? பைத்தியக்காரனா?" என்றேன் சிரித்துக்கொண்டு.

"இல்லை; நான் ஒரு கைதியுங்க!" என்றான்.

இதைக் கேட்டவுடனேயே எனக்குத் திடுக்கிட்டது.

"என்ன! கைதியா? சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடிவந்து விட்டாயா, என்ன?" என்றேன் நடுக்கத்துடன்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த என் மனைவியின் பீதிக்கு அளவேயில்லை. "உள்ளே வாங்கோ, கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போடுகிறேன்" என்றாள்.

அதற்கு நான் தயாராக இருக்கவில்லை. அவனைப் பற்றி முழு விவரமும் தெரிந்து கொண்டுதான் மேலே என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று நினைத்தேன்.

"அம்மா, அம்மா! நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. கைதி என்றால் எல்லாரும் ஒரே மாதிரியல்ல. அவர்களிலும் நல்லவர்கள் கெட்டவர்கள் உண்டு. ஆனால் என்னைப் பற்றி நான் உங்களிடம் நல்லவன் என்று சொல்லிக் கொள்ள வரவில்லை. நான் திருடன்தான்; என் குழந்தைகள் பசியால் வாடுவதைப் பார்க்கச் சகிக்காமல் பசிக் கொடுமையால் திருட வந்தேன். நான் கொலைகாரனும் கூடத் தான். ஆனால் கொல்லவேண்டும் என்பதற்காகக் கொல்லவில்லை; பயந்து போய்த் தற்காப்புக்காகக் கொன்று விட்டேன்..."

இதைக் கேட்டவுடன் எனக்கு அவன் மேலிருந்த அருவருப்பு இன்னும் அதிகமாயிற்றே தவிரக் குறையவில்லை. ஆனால் அவன் என்னை விட்டபாடில்லை.

"ஆ! பார்த்தீர்களா, சாமி? நான் திருடன், கொலைகாரன் என்று சொல்ல உங்களுக்கு என்மேல் ஆத்திரமும் கோபமும் அதிகமாகிறதே தவிரக் குறையவில்லை என்பதை நீங்கள் சொல்லவில்லை. உங்கள் கண்கள் சொல்கின்றன. ஆமாம், சாமி! இந்தக் கண்கள் பேசுவதுபோல் எதுவுமே பேசுவதில்லை. மகிழ்ச்சியோ துக்கமோ கண்கள் கூறுவது போல் கவிகளாலும் முடியாது. இதெல்லாம் அனுபவத்தில் கண்ட உண்மைகள். இந்தக் கண்கள் பயமுறுத்துவது போல் அணுகுண்டுகூடப் பயமுறுத்த முடி



யாது. ஒரு மனிதனுடைய கண்கள்தான் என்னைக் கொலைக்குற்றம் செய்ய வைத்தன. இந்தக் கண்கள்தான் நான் வாழ்நாள் முழுவதும் பச்சாத்தாபப்பட்டு வருந்தும்படியான காரியத்தைச் செய்ய வைத்தன!'' என்று சொல்லிக் கொண்டே போனான்.

எனக்கும், என் இல்லாளுக்கும் அவனிடம் சற்று அனுதாபம் ஏற்பட்டது.

''ஏய்! இவ்வளவு தர்ம நியாயம் பேசுபவன் ஏன் திருடப் போனாய்? ஏன் கொலை செய்தாய்? அதைச் சொல்லேன், பார்ப்போம்'' என்றேன்.

''அதற்கு என் கதையையே அல்லவா சொல்ல வேண்டும்!'' என்றான்.

''சொல்லேன்!'' என்றேன்.

''உங்களுக்கு என்ன காரியமோ? என் கதையைச் சொல்லி உங்கள் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை, சாமி! நீங்கள் உங்கள் காரியத்தைப் பாருங்கள்!''


அடடா! என்ன பணிவு! என்ன நன்னடத்தை!

''சும்மா சொல்! எனக்கொன்றும் அவசரக் காரியமில்லை'' என்றேன்.

அவன் சொல்ல ஆரம்பித்தான்: ''எங்கள் ஊரில் பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு பசிப்பிணி ரொம்பவும் வாட்டி எடுத்தது. மழையின்றி, பயிர் விளையவில்லை. ஆகவே நிலம் படைத்தவர்கள் எல்லாரும் நிலத்தை விற்று விட்டார்கள். 'கெட்டும் பட்டணம் சேர்' என்ற பழமொழியை வேதவாக்காக நம்பிப் பட்டணத்தை நோக்கிச் சிலர் வந்து விட்டார்கள். வேறு சிலர் சொந்த ஊரை விட்டு, வெளியூரில் பிச்சையாகிலும் எடுத்துப் பிழைக்கச் சென்றார்கள். தேக திடம் பொருந்திய வாலிபர்கள் சிலர் திருடிப் பிழைக்கத் துணிந்தார்கள். எனக்குத் துணையாக அமைந்தவர்கள் கடைசிக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

அவர்கள், என் குழந்தைகளும் மனைவியும் வறுமையால் வாடுவதைக் கண்டு நான் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருப்பதையும் பார்த்து என்னைக் கண்டபடி வைதார்கள். உடம்பில் பலமிருக்கும்போது துணிந்து ஒரு காரியம் செய்துதான் ஆகவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆம். அவர்கள் 'திருடித்தான் ஆகவேண்டும்; இல்லாவிட்டால் பிழைக்க முடியாது' என்று சொல்லிவிட்டார்கள்.

என் மனசு அதற்குச் சற்றும் இடங் கொடுக்கவில்லை. 'இது என்ன அக்கிரமம்!



பசிக் கொடுமைக்காகத் திருடப் பருவதா?'' என்று ஏதேதோ நினைத்தேன்.

இந்த நினைவுகளில் - சஞ்சலத்தில் - ஒரு வாரம் கழித்தேன். நாளாக ஆகக் கொடுமை அதிகமாகி வந்தது. நான் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தேன். வீட்டுக் கஷ்டம் சகிக்கக் கூடியதாக இல்லை. அதனால் அவர்களைக் கடவுளின் கருணைக்கு ஒப்படைத்துவிட்டு, வீட்டை விட்டுச் சொல்லிக் கொள்ளாமல் ஓடி விட்டேன்.

நான்கைந்து நாட்கள் எங்கெல்லாமோ ஓடித் திரிந்தேன். எங்கள் கிராமத்தை விட்டு வெகு தூரம் வந்து விட்டேன். கால் நடையாகவே எங்கெல்லாமோ சுற்றியதால் எனக்குச் சளைப்பும் தளர்ச்சியும் மேலிட்டன. அப்போது மாலை. ஏதோ ஓர் ஊரில் ஒரு பிரம்மாண்டமான

மாளிகையின் வாசலில் வந்து நின்றேன். அந்த மாளிகை ஆள் அரவமின்றியிருந்தது. ஆகவே மெள்ளத் தோட்டத்துக்குள் நுழைந்தேன். யாரும் என்னைத் தடுக்கவில்லை. வீட்டுக் கதவும் திறந்திருந்தது. வீட்டுக்குள்ளும் நுழைந்தேன். மனித வாசனையே அந்த அழகிய மாளிகையில் இருந்ததாகத் தெரியவில்லை. வீட்டுக்குள் கொஞ்ச தூரம் நுழைந்ததும் மாடிப்படி வந்தது. அந்தப் படியில் ஏறி மாடிக்குச் சென்றேன். அங்கேயும் யாரும் என்னைத் தடுக்கவில்லை. அறைக் கதவுகள் எல்லாம் திறந்திருந்தன. ஒரு அறையில் அழகிய நிலைக் கண்ணாடியும் மேஜையும் நாற்காலிகளும் இருந்தன. இன்னொரு அறையில் புஸ்தக அலமாரிகள் இருந்தன. இப்படி எத்தனையோ விதவிதமான அறைகள். இவைகளையெல்லாம் கடந்து கடைசியில் ஒரு சிறிய அறையிருந்தது. அதில் ஒருவர் படுக்கக்கூடிய சிறிய கட்டில் இருந்தது. அந்தக் கட்டிலில் விரித்திருந்த படுக்கையின் மேல் போர்வை கலைந்து கிடந்தது. அந்தக் கட்டிலிலிருந்து நாலடி தூரத்தில் சுவரில் பதிக்கப்பட்ட இரும்புப் பெட்டி தெரிந்தது. அந்த இரும்புப் பெட்டியின் சாவித் துவாரத்தில் சாவிக் கொத்து இருந்தது. அதைப் பார்த்ததும் எனக்குச் சபலம் தட்டியது. மெள்ள அந்த அறையினுள் நுழைந்து அந்த இரும்புப் பெட்டியைத் திறந்தேன். முதலில் என் கண்ணுக்குப் பட்டது ஒரு ரிவால்வர். அதைக் கண்டவுடனேயே உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை ரத்தம் என் உடலுக்குள் வேகமாகப் பாய்ந்து வருவதை உணர்ந்தேன்.



"எங்கே ஸார், கிளம்பிட்டேள்?"

"ஜோஸ்யரைப் பார்த்து இந்த மாசத்துக்குள்ளேயாவது வீடு கிடைக்குமான்னு கேட்டுண்டு வரலாம்னு கிளம்பினேன்!"

"அடடே! என்ன இது. திடீர்னு உங்களுக்கு ஜோஸ்யத்திலே நம்பிக்கை பிறந்து விட்டதா! முந்தியெல்லாம் ஜோஸியமானு திட்டுவேளே!"

"அதில்லே, ஓய்! அவர் வீடு ஒன்று காலியாகிறதாம்; அதைக் கேட்கக் கிளம்பினேன்!"

அடுத்த விநாடி அதை இடது கையில் எடுத்து வைத்துக்கொண்டு பெட்டியைப் பார்த்தேன். கட்டுக் கட்டாக ரூபாய் நோட்டுகள் இருந்தன.

நோட்டுகளை அவசர அவசரமாக எடுத்து என் சட்டைப் பையில் திணித்துக் கொண்டிருந்தபோது, அங்கிருந்த வேறொரு நோட்டுக் கட்டின் மேல் வைத்திருந்த பளுக்குண்டு நழுவிப் பெட்டிக்குள்ளேயே விழுந்து சிறு சத்தம் உண்டாக்கியது.

அதை நான் பொருட்படுத்தவில்லை. இந்த மெல்லிய சத்தம் அரவமற்ற வீட்டில் யாருக்குக் கேட்கப் போகிறது என்று நினைத்தேன்.

ஆனால் அது எவ்வளவு தவறு என்பது அடுத்த கணமே தெரிந்துவிட்டது.

"யார் அது?" என்று ஒரு குரல் எங்கிருந்தோ வந்தது.

பின்னால் திரும்பிப் பார்த்தேன். 'யாருமே இல்லை' என்று நினைத்த படுக்கையிலிருந்து ஒரு மெலிந்த கிழவர் எழுந்து உட்கார்ந்திருந்தார். அவர்தான் "யார் அது?" என்று அதிகாரம் தொனிக்கும் குரலில் கேட்டது.

எனக்குத் திகில் பிடித்துக் கொண்டது. ஆனால் அவர் மீண்டும் மீண்டும் 'யார் அது?' என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். உடனே எனக்குப் பயந்து பயனில்லை என்று தோன்றியது.

"ஐயா, சத்தம் போடாதே! சத்தம் போட்டாயோ இந்த ரிவால்வரைக் கொண்டே சுட்டுக் கொன்றுவிடுவேன்" என்றேன் கடுமையான குரலில்.

அப்போது அவருடைய கண்களைப் பார்க்கப் பயமாயிருந்தது. அவை அனல் கக்குவது போலிருந்தன. 'திருதிரு' என்று விழித்துப் பார்த்தது எனக்கு வேறொரு எண்ணத்தைக் கிளப்பிவிட்டது. அவரோ நம்மை நன்றாகப் பார்த்து விட்டார். அவரைக் கொல்லாமல் விட்டால் ஒரு நாள் நம்மை அடையாளம் கண்டு பிடித்துப் போலீஸாரிடம் ஒப்படைத்து விடுவார். ஆகவே, இந்த அரவமற்ற பிரதேசத்தில் கொன்று போட்டு விட்டால், நம்மை அடையாளம் கண்டு

பிடித்துச் சொல்லுபவர்கள் யாருமில்லாமற் போய் விடுவார்கள் என்ற கொடுமையான யோசனை தோன்றிற்று.

அதற்குள் கிழவனுர் "திருடன், திருடன்!" என்று இரைய ஆரம்பித்து விட்டார்.

"இனி பொறுக்கக்கூடாது!" என்று தீர்மானித்து ரிவால்வரால் சுட்டேன்.

அந்தச் சிறிய அறையில் ரிவால்வரால் உண்டாக்கப்பட்ட சத்தம் நாலுதிசையும் எதிரொலித்தது. எங்கிருந்தோ பல ஆட்கள் மாடிப் படி ஏறி திமுதிமு என்று வருவது கேட்டது.

என் இதயத் துடிப்பு ஒரு கணம் நின்று விட்டது. மூச்சும் தடைப்பட்டது. சிந்தையும் மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து விட்டது.

சுய உணர்வு வந்து நான் தப்பித்துக் கொள்ள நினைத்தபோது, இருபது முப்பது பேர் என்னைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். நான் தப்ப எத்தனித்த முயற்சிகள் யாவும் வீணுயின. கடைசியாக திமிறிக் கொண்டு ஓட முயர்சித்தபோது ஏதோ தடுக்கிக் கீழே விழுந்தேன். களைப்பும் தளர்ச்சியும் அதிகமாயிருந்ததால் உணர்ச்சி யிழந்துவிட்டேன். பிறகு, பிரக்ஞை தெளிந்தபோது நான் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதை உணர்ந்தேன். கண் திறந்து பார்த்ததும், "ஸ்ரீமான் குருட்டு கோபாலசாமி முதலியாரை நீ சுட்டுக் கொன்ருயா?" என்று இன்ஸ்பெக்டர் என்னைக் கேட்டார்.

"என்ன, அவர் குருடரா? குருடரையா நான் கொன்றேன்?" என்று நான் வாய் விட்டுச் சொன்னேன். மனதில் "என்ன பாவம் செய்தேன்!" என்று சொல்லிக் கொண்டேன்.

எனக்கு ஏழு வருஷத் தண்டனை கிடைத்தது."

* * *

இவ்வளவு சொல்லிவிட்டு இங்கே சற்று நிறுத்தினுன் அவன். நாங்கள் ஏதாவது சொல்லுவோமோ என்று எதிர்பார்த்தானே என்னவோ! நாங்கள் மௌனம் சாதிக்கவே மேலே தொடர்ந்தான்:

"பார்த்தீர்களா! அந்தக் கண்கள் பார்வை யிழந்திருந்தாலும் திகிலும் பீதியையும் உண்டாக்கத் தக்க உணர்ச்சியை வெளியிட்டன. அந்தப் பயத்தில் நான் என்ன செய்கிறேன் என்றே தெரியாமல் திகைத்து விட்டேன். அதனுல் ஒரு குற்றத்துக்கு இரண்டு குற்றம் செய்தேன். ஏழு வருஷச்



சிறைத் தண்டனை பெற்றேன். இன்றுதான் என்னை விடுதலை செய்தார்கள். எனக்குப் பசி அதிகமாக இருக்கிறது. ஒரு வாய் சோறு இருந்தால் போடுங்களேன்!" என்று இறைஞ்சிக் கேட்டான்.

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இவனிடம் அனுதாபம் காட்டலாமா கூடாதா என்று திகைத்தேன். கொலைக் குற்றத்துக்கு ஏழுவருஷத் தண்டனைதானா என்று ஒரு சந்தேகம் மனதின் அடிவாரத்தில் தோன்றியது. ஆனால் அது சற்று நாழிகைக்கெல்லாம் அடங்கி விட்டது.

ஆனால் என் மனைவிக்கு அத்தகைய சஞ்சலம் இருந்ததாகத் தெரியவில்லை.

"என்னதான் யோக்யன் என்று சொல்லிக் கொண்டாலும் நீ திருடன் திருடன் தான்; கொலைகாரன் கொலைகாரன்தான்! உங்களுக்கெல்லாம் 'ஐயோ பாவம்' என்று இரங்கினால் அதுவே மகா பாவம்! அதனால் உனக்குச் சோறு கிடையாது. போய்விட்டு வா!" என்றாள்.

இதைக் கேட்டவுடன் அவன் முகம் சுண்டிவிட்டது. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் போய்விட்டான். அவன் போன பரிதாபக் காட்சியைப் பார்த்தபோது எனக்கு அவனிடம் உண்மையிலேயே அனுதாபம் உண்டாயிற்று. அவனுக்குச் சோறு கூடப் போட்டிருக்கலாம் என்று தோன்றியது. ஆனால் அதைக் காரியாம்சமாக்க முடியாது என்று சும்மா யிருந்துவிட்டேன்!

* * *

கொஞ்ச நாழிகை கழித்து நான் வேறொரு காரியமாக வெளியே சென்றேன்.

எங்கள் தெருக்கோடியில் ஒரு பாலமிருக்கிறது. அதன்மீது இரண்டு பிச்சைக்காரர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அதில் ஒருவன் சற்று நாழிகைக்கு முன் எங்கள் வீட்டுக்கு வந்து திருப்பப்பட்டவன். அவனிடம் அடுத்தவன், "என்னப்பா, பிச்சை யெடுப்பதில் புதுத் தந்திரம் கையாளப் போகிறேன் என்று சொன்னாயே! அந்தத் தந்திரம் பலித்ததா?" என்று கேட்டான்.

அதற்கு அவன் கூறிய பதில் இதுதான்: "தந்திரம் பலித்துத்தான் இருக்கும். ஆனால் ஒரே ஒரு சிறு தவறு செய்துவிட்டேன். அவ்வளவும் நிஜம் போல் சொல்லிவிட்டேன். அதனால் அவர்கள் என்னிடம் இரக்கப்படவில்லை!"



தமிழ்ச்சுடர் வெளியீடுகள்

தமிழ்ச்சுடர் நிலையத்தார் வெளியிட்டிருக்கும் புத்தகங்கள் தக தக வென்றும் பள பள வென்றும் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. பெயருக்குப் பொருத்தமான தோற்றம் கொண்ட புத்தகங்கள். அவற்றில் மூன்று, புகழ்பெற்ற மேனாட்டு ஆசிரியர்கள் எழுதிய நாவல்கள்.

இலக்கிய உலகத்திலே மகான் டால்ஸ்டாயை அறியாதவர்கள் யார் இருக்கப் போகிறார்கள்? 'தெய்வக் கலைத் தச்சன்' என்று அகில உலகமும் புகழ்ந்து போற்றும் அந்த மகான் எழுதிய நூல்களிலே அன்னா கரீனாவும் ஒன்று. பெண் மனத்தை அன்புடனும் அனுதாபத்துடனும் ஆராய்ந்து டால்ஸ்டாய் எழுதிய இந்த நவீனத்தைப் படித்து, இதில் மயங்காத இலக்கிய ரசிகர்கள் யாரும் இல்லை.

இம்மாபெரும் நாவல் இப்போது தமிழில் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது. டால்ஸ்டாயின் மகோன்னதமான இலக்கிய சிருஷ்டிகளிலே ஒன்றைத் தமிழர்கள் படித்து அனுபவிக்கலாம்.

மொழி பெயர்த்தவர்: வெ. சந்தானம்; பக்கம் 744; விலை: மலிவுப் பதிப்பு ரூ. 7-8-0; ஆண்டிக் ரூ. 10.

அவமானச் சின்னம் மனதை உருக்கும் ஒரு சோகக் கதை. ஒரு பெண்ணின் வாழ்வைக் குலைத்து, அவளுக்குச் சாசுவதமான களங்கத்தை உண்டு பண்ணிய ஒரு இளம் பாதிரியார் தாம் செய்த தப்பிதத்தை நினைத்து நினைத்து உள்ளம் நொந்து, கடைசியில், எல்லோருக்கும் முன்பாகத் தாம் செய்த தப்பிதத்தைச் சொல்லிவிட்டு அப்படியே தம் காதலியின் மடிமீது விழுந்து பிராணனை விடுகிறார். அந்தப் பெண்ணின் சகிப்புத் தன்மைதான் என்ன! எவ்வளவோ வற்புறுத்தியும் பலவந்தப் படுத்தியும் கூடத் தன் காதலனைக் காட்டிக் கொடுக்க மறுத்து, கடைசி வரை மௌனம் பூண்ட அவளுடைய திடசித்தம்தான் என்ன!

இது நத்தானியேல் ஹாதார்ன் என்ற அமெரிக்க ஆசிரியர் எழுதியது.

பக்கம்: 331; விலை ரூ. 5.

துன்பக்கேணி ஒரு ஜெர்மன் நாவல். 1933-ம் வருஷத்திலிருந்து பதினொரு வருஷங்கள் வரை — அதாவது 1944ம் வருஷம் வரை ஐரோப்பா எப்படி இருந்தது; கொடூரங்களும் ராஜதந்திர விளையாட்டுகளும் அங்கே எப்படியெல்லாம் நடந்தன; ஹிட்லர் ஆட்சியிலே யூதர்கள் பட்ட கஷ்டங்கள் என்னென்ன என்பதை இந்த நாவல் சித்திரிக்கிறது.

மொழி பெயர்த்தவர்: எஸ். எஸ். மாரிசாமி; பக்கம் 486; விலை ரூ. 6.

பொதுவாக, இந்த மூன்று நாவல்களையும் மாபெரும் நாவல்களாகத்தான் சொல்ல வேண்டும். இலக்கிய மதிப்பில் மாத்திரம் அல்ல; புத்தகங்களின் வடிவத்திலும் கனத்திலும் கூடத்தான்!

மேற்கண்ட மூன்று நாவல்களைத் தவிர ஸ்ரீ ப. ராமஸ்வாமி எழுதிய மைக்கேல் காலின்ஸ் என்ற ஒரு புத்தகத்தையும் தமிழ்ச் சுடர் நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

மைக்கேல் காலின்ஸ் ஒரு ஐரிஷ் தேசபக்தன். அயர்லாந்து சுதந்தர மடைவதற்காக அரும் பாடு பட்டவன். பிரிட்டனை எதிர்த்து அவன் நடத்திய போராட்டங்கள், அடடா, எவ்வளவு தீரம் நிறைந்தவை! மயிரிழை தப்பினால் பிரிட்டிஷ் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகியிருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எத்தனை? ஆனால், பிரிட்டிஷ் துப்பாக்கிகளுக்குக் காலின்ஸ் இரையாகவில்லை. அவன் தலைவிதி வேறு விதமாக இருந்தது. வாழ்க்கையின் இறுதியில் அந்த உத்தம வீரன் கடைசியில் தன்னுடைய சொந்த அயர்லாந்து மக்களுடைய குண்டுக்கே பலியாக நேர்ந்தது என்பதைப் படிக்கும்போது நம்முடைய கண்ணில் கண்ணீர் ததும்புகிறது.

பக்கம் 286; விலை ரூ. 4.



என் அதிர்ஷ்டம்

-பகீரதன்

“எப்பொழுதுமே உன்னை அதிர்ஷ்டம் துரத்திக் கொண்டு வரும்” என்று என் கையைப் பார்த்து விட்டு அந்த ரேகை சாஸ்திரி சொல்லிவிட்டுப் போனார். நான் அவருக்குக் கொடுத்த தெல்லாம் ஆறணாக் காசுதான். அவர் சொல்லிவிட்டுப் போனதிலிருந்து அதிர்ஷ்டம் என்னைத் துரத்த ஆரம்பித்து விட்டது. நான் வேலை பார்த்து வந்த வியாபாரக் கம்பெனியில் திடீரென்று ஏராளமான நஷ்டம் ஏற்படவே கடை முதலாளி என்னைக் கடையை விட்டுத் துரத்தி விட்டார்; அவரையும் கடன் காரர்கள் துரத்த ஆரம்பித்து விட்டார்கள்!

என்னைத் துரத்திக் கொண்டு முப்பது நாட்களும் ஓடிவிட்டன. நானும் முப்பது நாட்களாக எத்தனையோ கடை முதலாளிகளைத் துரத்தித் துரத்தி வேலை கேட்டுப் பார்த்து விட்டேன். முயற்சி என்று சொல்லுவதா, அதிர்ஷ்டம் என்று சொல்லுவதா என்றே தெரியவில்லை — கடைசியில் ஒருநாள் என்னைத் துரத்திக் கொண்டு ஒரு பெரிய முதலாளி வந்தார்.

“நீ ஒரு ‘டூரிங் இன்ஸ்பெக்ட’ராக என்னுடைய கம்பெனியில் வேலை பார்க்க வேண்டும். வெளியூர்களில் உள்ள என்னுடைய கம்பெனியின் எல்லாக் கடைகளையும் ‘இன்ஸ்பெக்ட்’ பண்ணுவதுடன் அங்குள்ள பெரிய முதலாளிகளையெல்லாம் துரத்திப் பிடித்து நமது சாமான்களைப் பற்றி விளம்பரம் செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

உடனே அந்தவேலையை ஒப்புக்கொண்டு, அன்று இரவே நான் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் மதுரைக்குப் பிரயாணமானேன். எனக்காக அல்ல, என்னுடைய கம்பெனியின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக வேண்டி இரண்டாவது வகுப்பிலே பிரயாணம் செய்தேன்.

என்னுடன் இன்னும் நாலுபேரும் அந்த வகுப்பில் இருந்தார்கள். பொழுது போக்காக அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த போதுகூட நான் புதிதாக வேலை ஏற்றுக் கொண்ட கம்பெனியை மறக்கவில்லை. அதைப் பற்றியும் அதில் உள்ள சாமான்களைப் பற்றியும் அவர்களிடம் விளம்பரப் படுத்தினேன். இந்தப் பேச்சு முடிந்த வுடன் ஊர்க் கதைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தோம்.

எதிரில் உட்கார்ந்திருந்த ஒருவர், “ஸார்! இந்த அபூர்வமான கதை சில வருஷங்களுக்கு முன்னால் சென்னையில் நடந்தது. நீங்கள்கூடக் கேட்டிருக்கலாம், தௌலத்ராம் என்ற வைர வியாபாரியைப் பற்றி...” என்று ஆரம்பித்தார்.

‘ஊம்’ என்று சொல்லி, மேலே கதையைத் தொடர்ந்து சொல்லுவதற்கு அவரைத் தயார் செய்தேன்.

“தௌலத்ராமுக்குப் பிள்ளை குட்டி ஒன்றுமே கிடையாது. வடநாட்டிலிருந்து சென்னைக்கு வரும் பொழுது, அவன் ரோடிலே தள்ளு வண்டியில் வெளிநாட்டுச் சாமான்களைப் போட்டுக் கொண்டு ‘எதை எடுத்தாலும் ஒன்றரையணா, இரண்டரையணா’ என்று கூவித் திரிந்தான். பிறகு பெட்டிக் கடை வைத்தான். ஒரு சில வருஷங்களில் வைர வியாபாரியாகவே மாறி விட்டான். பார்த்தீர்களா? நமது தமிழ்நாட்டில் ஒரு துர்ப்பாக்கியம். நமக்குள் யாராவது ஒருவர் நல்ல நிலைமைக்கு வந்து விட்டால், பணம் சேர்த்து விட்டால், ‘அவனுக்கு ஏது பணம்? எங்கிருந்து வந்தது? லஞ்சம் வாங்கியிருக்கிறான், கறுப்பு மார்க்கெட்டில் கொள்ளை யடித்திருக்கிறான்!’ என்றெல்லாம் சொல்லி, அவனைச் சந்தோஷமாக வாழவிடாமல் செய்து விடுகிறோம். ஆனால் தெருவிலே கைவண்டி தள்ளிக் காலம் கழித்த தௌலத்ராம் பிரபல வைர வியாபாரியானதைப் பற்றி நம்மில் யாருமே கவலைப்படுவது யில்லை; குறை சொல்வதுமில்லை. அதற்கு நேர்மாறாக நாம் அவனுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க ஆரம்பித்துவிடுகிறோம்!”

“ஆமாம், ஸார்! இந்த வழக்கம் எப்பொழுது தொலைந்து நமது ஜனங்கள் முன்னுக்கு வரப் போகிறார்களோ, தெரிய


வில்லை. சரி, மேலே கதையைச் சொல்லுங்கள்" என்றேன்.

"தௌலத்ராம் தான் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் பாங்கில்கூடப் போடுவதில்லை. வீட்டிலேயே இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்துக் கொண்டான். இன்னும் கடை சம்பந்தமான எந்த விஷயத்துக்கும் அவன் யாரையும் நம்புவதில்லை. எல்லாவற்றையும் தானே கவனித்துக் கொண்டான். பட்டணம் தங்கவேலு என்று ஒருவன் சென்னையில் இருந்ததை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவன் ரொம்பக் காலமாக முதல் இல்லாமலேயே தொழில் நடத்தி வந்தான். தினம் ஒன்றுக்கு நூறு இருநூறு என்று சம்பாதிப்பான். சில நாட்களில் ஆயிரம் இரண்டாயிரம் என்று கூடச் சம்பாதிப்பான். இவ்வளவு வருமானமுள்ள அவன் தொழில் என்ன தெரியுமா? தன் தேவைக்கு மேலே பணம் வைத்திருப்பவர்களாகப் பார்த்து, அவர்களிடம் அவர்களை யறியாமலே பணத்தை எப்படியோ கொண்டு வந்து விடுவதுதான்! அவனைப் பிடிக்கப் பணத்தைப் பறி கொடுத்தவர்களிலிருந்து ரகசியப் போலீஸார் வரை எவ்வளவோ முயன்று பார்த்து விட்டார்கள், முடியவில்லை.

"பட்டணம் தங்கவேலுவின் திருப்பார்வை நமது வைர வியாபாரி தௌலத்ராம்மீது விழுந்தது. ஒவ்வொரு நாளும் தௌலத்ராமின் நடவடிக்கைகளை அவன் மிகவும் கவனமாகக் கவனித்து வந்தான். ஒரு நாள் தௌலத்ராம் தன் வியாபார விஷயமாக வெளியூருக்குச் செல்லவேண்டியிருந்தது. அவன் வெளியூர் சென்ற அன்றைய தினம் இரவு பத்து மணிக்குத் திருட்டுச் சாவி போட்டு, தௌலத்ராமின் கடையைத் திறந்து உள்ளே நுழைந்து விட்டான் தங்கவேலு. தன்னுடைய முன் யோசனையின் பேரில் கடையில் மின்சார விளக்குகள் எரிய முடியாதபடி மின்சாரக் கம்பிகளையும் வெட்டி விட்டான். இதனால் கடையின் உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. தன் கையில் வைத்திருந்த நெருப்புக் குச்சியைக் கிழித்து, அந்த வெளிச்சத்தைக் கொண்டு இரும்புப் பெட்டிகளுக்கெல்லாம் கள்ளச் சாவி போட்டு, அதிலிருந்த பளபள வென்று மின்னிய வைரங்களையும் கத்தை கத்தையாகக் கட்டி வைத்திருந்த நோட்டுகளையும் எடுத்துப் பையில் வைத்துக்கொண்டு திரும்பினான். அவனுடைய போதாத காலமோ என்னமோ, எதிர்பாராத விதமாக ரயில் தப்பித் திரும்பிவந்த தௌலத்ராம் திடீரென்று கடைக்குள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்த தங்கவேலுவுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது. இருந்தாலும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு தன் கையில் வைத்திருந்த தடியால் தௌலத்ராம் மண்டையில் ஓங்கி அடித்து விட்டான். அந்த அடியைத் தாங்க முடியாத தௌலத்ராம் மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டார்!"

"என்ன அநியாயம்! பணத்துக்குப் பணமும் போய் உயிருக்கும் ஆபத்தா?" என்றேன்.

"ஆபத்துக் காலத்தில் அதையெல்லாம் பார்க்க முடியுமா, ஸார்! தங்கவேலு இந்த முதலில்லாத் தொழிலில் ஈடுபட்டதிலிருந்தே இது போன்ற நெருக்கடியான நிலைமையில் மாட்டிக் கொண்டது கிடையாது. அதனால் தௌலத்ராம் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தவுடன் அவனுடைய கைகால்கள் எல்லாம் வெடவெட வென்று நடுங்க ஆரம்பித்து விட்டன. என்ன செய்வதென்றே புரியாமல் தவிக்க ஆரம்பித்து விட்டான். நல்லவேளையாக அந்தச் சமயத்தில் வெளியிலிருந்து யாரோ, 'தௌலத்ராம், தௌலத்ராம்!' என்று கூப்பிடும் சத்தம் கேட்டது. அவ்வளவுதான்; அவசர அவசரமாய்க் கீழே கிடந்த தௌலத்ராமை அருகில் இருந்த பீரோவின் அடியில் மறைத்து வைத்துவிட்டு, கடையின் பின்புற வழியாக வெளியே ஓட முயற்சி செய்தான் தங்கவேலு. ஆனால், அதற்குள் வெளியிலிருந்தவர் உள்ளே வந்து விட்டார். தங்கவேலுவின் நிலைமை இன்னும் மோசமாகி விட்டது. உடனே நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, தங்கவேலுவே தௌலத்ராம்போல நடிக்க ஆரம்பித்து விட்டான். 'என்ன ஸார்! திடீரென்று எலக்டிரிக் கரண்ட் மோசம்செய்து விட்டது. அரிக்கன்





ஹோட்டல் முதலாளி:—"என்னப்பா! உன் பாலில் ஏதாவது கலக்கறியா. என்ன? கொஞ்சம் தண்ணீர் ஊற்றினால்கூடக் கெட்டுப் போயிடறதே!"

பால்காரன்:—"நீங்க வேறே தண்ணீர் ஊத்தறீங்களா? பின்னே கெடாமல் என்னங்க செய்யும்?"

விளக்கைக் கொளுத்தலாம் என்றால் அந்த விளக்கும் இருட்டில் அகப்பட மாட்டேன் என்கிறது. இன்றைக்கு என்று கடைப் பையன்கள் எல்லாம் சீக்கிரம் வீட்டுக்குப் போய் விட்டார்கள்!' என்றான் தங்கவேலு. 'நீங்கள்தான் என் கடிதத்திலேயே எழுதியிருக்கீங்களே— 'கடையில் யாரும் இருக்கக் கூடாது. இரவு பத்து மணிக்கு மேலே வாருங்கள்' என்று! பையன்கள் இல்லா விட்டால் என்ன? பாதகமில்லை; என் கையில் நெருப்புப் பெட்டி இருக்கிறது. நானே அரிக்கன் லைட்டைத் தேடி எடுத்து விடுகிறேன்!' என்று சொல்லி, வந்தவர் கிழிப்பதற்காக நெருப்புக் குச்சியை எடுத்தார். அடுத்த நிமிஷம் தங்கவேலு இன்னொரு கோரமான சதியையும் செய்யச் சித்தமாகி விட்டான். அதாவது, தௌலத்ராமை அடிக்க உதவிய அதே கைத்தடியினால் அந்தப் புது மனிதரின் தலையிலும் அடிக்கக் கையை ஓங்கினான். இந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாகக் கறுப்பு நீள அங்கியைப் போட்டுக் கொண்டிருந்த ஓர் உருவம் அவன் கையைப் பிடித்து நிறுத்தியது. அதைத் தொடர்ந்து இன்னும் சிலர் அரிக்கன் லைட்டுடன் கடைக்குள் நுழைந்தனர். கறுப்பு நீள அங்கி அணிந்திருந்த அந்த உருவம் ஓர் அழகான இளம் பெண்ணாக இருப்பதைப் பார்த்தவுடன் எல்லாருமே பிரமித்துப் போய் நின்றார்கள்......!"

* * *

இத்துடன் கதையை நிறுத்திக் கொண்ட அந்த வாலிபர், "இந்தக் கதையைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களல்லவா? ஆனாலும் இது உண்மையிலேயே நடந்தது. நேற்று நடந்தது; மறுபடியும் இன்று மதுரையிலே நடக்கிறது. இந்தக் கதையின் முடிவை — அதாவது, தங்கவேலு பிறகு என்ன ஆனான்? அந்த இளம் பெண் யார்? திடுதிடு என்று கும்பலாக வந்த கூட்டம் தங்கவேலுவின் ஆட்களா? இல்லை, போலீஸ்காரர்களா?— என்பதை நாங்கள் ஒரு சமூக முன்னேற்ற நிதிக்காக நடத்தும் நாடகத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். முதல் வகுப்பு டிக்கட் பதினைந்து ரூபாய்தான்!" என்றான்.

என்னுடன் பேசிக் கொண்டிருந்த மற்றவர்கள் ஆளுக்கு இரண்டு டிக்கெட் வாங்கிக் கொண்டனர். என்னையும் அந்த வாலிபன் டிக்கெட் வாங்கச் சொல்லுவானோ என்று பயந்து கொண்டிருந்தேன். அதற்கு நேர்மாறாக அந்த வாலிபன், "என்னிடம் மீதி இருந்ததே நாலு டிக்கெட்டுகள்தான். நீங்கள் மதுரையிலேயே டிக்கட் வாங்கிக் கொள்ளலாம்!" என்று சொல்லி ஒரு புன்னகை புரிந்தான்.


இந்தச் சமயத்தில் ரயில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் நின்றது. என் வகுப்பிலிருந்த எல்லாரும் அந்த வாலிபனுடன் கீழே இறங்கிப் போய் விட்டார்கள்.

நான் அந்த வாலிபனின் சாமர்த்தியத்தை நினைத்து வியந்தவண்ணம், என்னுடைய படுக்கையைச் சரி செய்து கொண்டு சற்றுப் படுக்கலாம் என்று நினைத்துச் சட்டையைக் கழற்றினேன். என்ன ஆச்சரியம்! ரூபாய் ஆயிரத்துக்கு மேல் வைத்திருந்த என் மணிபர்ஸைக் காணோம்!

நான் என்னத்தைச் சொல்ல? அங்கு வந்திருந்த அத்தனை பேரும் தங்கவேலுவின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்று பின்னால் அல்லவா எனக்குத் தெரிந்தது? அவர்கள் நாடகமும் நடிக்கவில்லை; கதையும் உண்மையில் நடக்கவில்லை. என்னுடைய அதிர்ஷ்டம் அவர்களுடைய உருவத்தில் என்னைத் துரத்தி வந்து மணிபர்ஸை எடுப்பதற்காக ஒரு நாடகத்தை நடத்தியிருக்கிறது!


ASPRO
இதோ
நொடியில்
நிவாரணம்!
ஜாக்கிரதையாகவும் நிச்சயமாகவும் குணமாக்கும்
இரண்டு 'ஆஸ்ப்ரோ'
வில்லைகளை சிறிது
ஜலத்துடன்
சாப்பிடவும்
ASPRO
ASPRO
REG. TRADE MARK
ஆகையால் ஏன் வலியுடனும்
ஜுரத்துடனும் கஷ்டப்படுகிறீர்?
உங்களை குணமாக்க
'ஆஸ்ப்ரோ'
" இருக்கும்போது ஏன் அவஸ்தைப்படுகிறீர்?
'ஆஸ்ப்ரோ' செய்வது என்ன
ASPRO
68TM
விலை:
3 வில்லைகள் அணா 1. 6 வில்லைகள் அணா 2
30 வில்லைகள் அணா 10
எங்கும் கிடைக்கும்





சந்திரஹாரம்

ஆசிரியர்:....... மொழிபெயர்ப்பு:

பிரேம்சந்த்.....ரா. விழிநாதன்

சாயந்திரம் சாமான்களை ஏற்றிப்போவதற்காக அநேக வண்டிகள் ரத்தன் வீட்டு வாசலில் வந்து நின்றன. சிறிது நேரத்துக்கெல்லாம் மணிபூஷண் அவளிடம் வந்து, "சின்னம்மா! உங்களுக்கு வேண்டிய சாமான்களைச் சொல்லுங்கள். நான் ஏற்றி அனுப்பி வைக்கிறேன். உங்களுக்காக ஒரு வீடும் பார்த்து ஏற்பாடு செய்து விட்டேன்!" என்றான்.

"எனக்கு இந்த வீட்டில் உள்ள ஒரு தூசி துரும்புகூட வேண்டாம்; எனக்காக நீ வீடும் பார்த்துத் தரவேண்டாம். எந்தப் பொருள்களில் எனக்கு யாதொரு விதமான உரிமையும் கிடையாதோ, அவைகளை நான் என் கைகளால் கூடத் தொடமாட்டேன். நான் என் வீட்டிலிருந்து ஒன்றும் கொண்டு வரவில்லை. அதேபோல நான் வந்த விதமே திரும்பிப் போகிறேன்!" என்றாள் ரத்தன்.

மணிபூஷண் வெட்கிப்போய், "அப்படிச் சொல்லாதீர்கள். எல்லாம் உங்களுடையதுதான். 'எனக்கு ஒரு உரிமையும் இல்லை' என்று எதற்காகச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் ஒரு தடவை வந்து அந்த வீட்டைப் பாருங்கள். பதினைந்து ரூபாய் வாடகை. அங்கே யிருப்பதில் உங்களுக்கு ஒருவித சிரமமும் ஏற்படாது என்று எண்ணுகிறேன்!" என்றான்.

ரத்தன் அவனை ஏளனமாகப் பார்த்தவாறே, "அடாடா! பதினைந்து ரூபாய் வாடகை கொடுத்து எனக்காக அவ்வளவு பெரிய வீடு எடுப்பானேன்? நானோ ஒண்டிக் கட்டை, இரண்டு ரூபாய் வாடகையில் ஒரு சின்னஞ்சிறு அறை எடுத்திருந்தால் கூடப் போதுமானதாயிற்றே! பகவான் புண்ணியத்திலே படுக்கப் பூமி இருக்கிறது; குடிக்கத் தண்ணீர் இருக்கிறது. நான் வேறு எதற்குக் கவலைப்பட வேண்டும்?" என்றாள்.

மணிபூஷண் இன்னும் அதிக வினயத்துடன், "உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள். நான் உங்கள் இஷ்டப்படி எல்லாவற்றையும் பூர்த்தி செய்து வைக்கிறேன்" என்றான்.

"எனக்கு ஒன்றுமே வேண்டாம். இந்த வீட்டில் உள்ள ஒரு தூசியைக்கூட நான் எடுத்துப் போகப் போவதில்லை என்று நான் அப்பொழுதே சொல்லி விட்டேனே! எந்தப் பொருள்களிடத்தில் எனக்கு ஒரு உரிமையும் கிடையாதோ, அதைத் தொடுவதற்கு எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது! எப்படியும் நான் இரந்து உண்ணத் தயாராயில்லை. இந்தச் சொத்து உனக்குச் சொந்தம் என்கிறாய்; நீயே எடுத்துக்கொண்டு போ! நான் அதைத் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டேன். உலகத்தில் எத்தனையோ ஆயிரக்கணக்கான விதவைகள் அன்றாடம் கூலி வேலை செய்து தன் வயிற்றைக் கழுவிக் கொள்ள வில்லையா? அவர்களைப் போல நானும் இருந்து விட்டுப் போகிறேன். தன் வயிற்றைத் தானே கழுவிக்கொள்ளத் தெரியாதவர்கள் பிறருக்குச் சுமையாக உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு உரிமையற்றவர்கள்; அருகதையற்றவர்கள். அவர்கள் பிறருக்குச் சுமையாக உயிர்

வாழ்வதில் உலகத்துக்கு என்ன பயன்?" என்று சொல்லிக் கொண்டே ரத்தன் வீட்டை விட்டு வெளியேறுவதற்காக 'விடு விடு' என்று புறப்பட்டான்.

மணிபூஷண் உடனே அவனை வழி மறித்து, "உங்களுக்கு மனம் இல்லையானால் இந்தப் பங்களாவை நான் விற்கவில்லை" என்றான்.

ரத்தன் சுட்டு விடுவதுபோல அவனைப் பார்த்தான். அவனுடைய முகத்தில் கோபக் கனல் ஜொலித்துக் கொண்டிருந்தது. கண்களில் பொங்கி வந்து கொண்டிருந்த கண்ணீரின் வேகத்தைத் தடுத்து நிறுத்திக் கொண்டு, "இந்த வீட்டுப் பொருள்களுக்கும் எனக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் இல்லை என்று நான்தான் சொல்லி விட்டேனே! நான் வாடகைக்கு வாங்கி வந்த அடிமையைப்போல. அடிமைக்கும் வீட்டுக்கும் என்ன சம்பந்தம்? எந்தப் பாவி இந்தச் சட்டத்தை இயற்றினானோ, தெரியவில்லை. ஈச்வரன் என்று யாராவது ஒருவன் எங்கேயாவது இருந்தால்—அவனிடம் நியாயம் என்று ஒன்று உண்டானால்—ஒருநாள் அதே ஈச்வரனுக்கு எதிரே நின்று அந்தப் பாவியிடம், 'உனக்குத் தாயார்—தமக்கை யாருமே கிடையாதா? அவர்களை இப்படி அவலத்துக் குள்ளாக்கி அவமானப்படுத்த நீ சம்மதிப்பாயா?' என்று கேட்பேன். உலகம் முழுவதிலும் ஒலிக்கும் படியாகப் பேசக்கூடிய சக்தி மட்டும் என் நாவில் இருக்குமானால், நான் நம் நாட்டுப் பெண்மணிகள் அனைவரிடமும், 'சகோதரிகளே! அவிபக்த குடும்பத்திலேயே கல்யாணம் செய்து கொள்ளாதீர்கள். அப்படிச் செய்து கொள்ளும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், அந்த அவிபக்த குடும்பத்தைப் பிளந்து பிரிவினை செய்து கொள்ளும் வரையில் பேசாமல் சும்மா இராதீர்கள்; தூங்காதீர்கள்; கண் கொத்திப் பாம்பாக இருங்கள். உங்கள் கணவன்மார் மரித்தபின் அம்மாதிரிக் குடும்பங்களில் இருந்துகொண்டு நீங்கள் மானமாக வாழமுடியும் என்று கனவில் கூடக் கருதாதீர்கள். உங்கள் கணவன்மார் பாகபத்திரம் செய்து கொள்ளாமல் அவிபக்தர்களாகவே இருந்து விட்டால் நீங்கள் தனிக் குடித்தனம் நடத்தினாலும் ஒன்றுதான்; ஒரே குடும்பமாக வாழ்ந்தாலும் ஒன்றுதான். நீங்கள் கஷ்டத்துக்கு ஆளாக வேண்டிவரும். உங்கள் புருஷன் உங்களுக்கென்று எழுதி வைத்தால்தான் நீங்கள் தனிமையில் மானமாக வாழமுடியும்; இல்லாவிட்டால் அவமானப்பட நேரிடும்; செக்கு மாடுபோல உழைக்க நேரிடும். அவிபக்த குடும்பம் என்பது உங்களுக்குப் புஷ்பப் படுக்கை போல் இராது. முட் படுக்கையாகத்தான் இருக்கும். உங்களைக் கரை சேர்க்கும் கட்டு மரமாக அது இராது; உங்களை விழுங்கிவிடும் பயங்கரப் பிராணியாகத்தான் இருக்கும்!' என்றெல்லாம் உபதேசம் செய்வேன்" என்றான்.

பொழுது சாய்ந்துவிட்டது. புழுதியைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருந்த பங்குனி மாதக் காற்று போவோர் வருவோரின் கண்களில் தூசியைத் தூவிக் கொண்டிருந்தது. ரத்தன் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு தெரு வழியே நடந்து கொண்டிருந்தான். வழியில் அவனுக்குத் தெரிந்த எத்தனையோ பேர் அவனை நிறுத்திப் பேசினர். சிலர் தங்கள் தங்கள் மோட்டார்கார்களை நிறுத்தி அவனை அதில் ஏறிக் கொள்ளும்படி வற்புறுத்தினர். ஆனால் அச்சமயம் ரத்தனுக்கு அவர்கள் காட்டும் அந்த அன்பு, அனுதாபம் எல்லாம் வேம்பாக இருந்தது. அவன் வெகு வேகமாகக் கால்களை எட்டிப் போட்டுக்கொண்டு பத்மாவின் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான். அன்றுதான் அவனுடைய உண்மை வாழ்க்கை ஆரம்பமாயிற்று!

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

உள்ளக் குமுறல்


சரியாகப் பத்து மணிக்குத் தேவீநீனும் பத்மாவும் கச்சேரியை அடைந்தார்கள். முன்னாலிருந்தே அநேக பார்வையாளர்கள் ஓரேயடியாகக் குழுமியிருந்தார்கள். மேலேயுள்ள 'காலரி'யும் நிரம்பியிருந்தது. எத்தனையோ மனிதர்கள் வராந்தாவிலும், எதிரேயுள்ள மைதானத்திலும் நின்று கொண்டிருந்தனர். பத்மா 'காலரி'யில் போய் உட்கார்ந்தாள். தேவீநீன் வராந்தாவில் நின்று கொண்டான்.

நியாயஸ்தலத்தில் ஜட்ஜுக்கு ஒரு புறத்தில் பெஞ்சுக் கிளார்க்குகள் நின்று

கொண்டிருந்தனர்; மற்றொரு புறத்தில் அநேகப் போலீஸ் அதிகாரிகள் நின்று கொண்டிருந்தனர். எதிரே கூண்டுக்கு வெளியே இருதரப்பு வக்கீல்களும் வழக்கு ஆரம்பமாவதை எதிர்பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தனர். குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை பதினோருக்குக் குறைவில்லை. அவர்கள் எல்லோரும் கை விலங்கும் கால் விலங்கும் மாட்டப்பட்டு, கூண்டுக்குப் பக்கத்தில் தரையில் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் எல்லாருமே மலர்ந்த முகத்துடன்தான் காட்சி யளித்தனர். எவருடைய முகத்திலும் வருத்தமோ, ஏமாற்றமோ, பதட்டமோ கொஞ்சமும் தென்படவே யில்லை.

மணி பதினொன்று அடித்ததும் வழக்கு ஆரம்பமாயிற்று. முதலில் சட்ட சம்பந்தமான சில விஷயங்கள் ஆலோசிக்கப் பட்டன. பிறகு இரண்டொரு போலீஸ்காரர்களின் சாட்சியம் நடந்தது. கடைசியாக, மூன்று மணி சுமாருக்கு ரமாகாந்த் சாட்சியம் சொல்லுவதற்காகக் கூண்டில் ஏற்றப் பட்டான். பார்வையாளர்களின் கும்பலில் ஒரு விதப்பரபரப்பு உண்டாயிற்று. வெற்றிலைக் கடையில் நின்று வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த ஒருவன் வெற்றிலையும் கையுமாக ஓடிவந்தான். பத்திரிகை படித்துக் கொண்டிருந்த இன்னொருவன் பத்திரிகையை மடித்துப் பையில் போட்டுக் கொண்டான். ஜனங்கள் எல்லாரும் நெரித்துக்கொண்டு நிற்கலாயினர். பத்மாவும் தன்னைச் சமாளித்துக் கொண்டு 'பால்கனி'யில் வந்து நின்றாள். 'ரமாகாந்த் தன்னை ஒரு தடவை பார்த்துவிடக் கூடாதா?' என்ற ஆசை அவளுக்கு. ஆனால் அவனோ அக்கம் பக்கத்தைக் கூடப் பார்க்கப் பயந்து கொண்டு, குனிந்த தலை நிமிராமலே நின்றான். அவனுடைய முகம் களையிழந்து காணப்பட்டது. யாரோ அவனைக் கட்டிப் போட்டிருப்பது போலவும், ஓடுவதற்கு வகையறியாமல் விழி பிதுங்க நின்று கொண்டிருப்பவன் போலவும் அவன் தோற்றமளித்தான். 'அடுத்த கணம் என்ன ஆகுமோ?' என்று எண்ணித் தன் பாக்கியப் பரிசீலனையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த பத்மாவின் இதயமும் 'படபட' வென்று அடித்துக் கொண்டது.

அதே சமயம்தான் ரமாகாந்தின் வாக்கு மூலம் ஆரம்பமாயிற்று. முதல் வாக்கியத்தைக் கேட்டதுமே பத்மா பதறிவிட்டாள். இரண்டாவது வாக்கியத்தைக் கேட்டதும் அவளுடைய புருவங்கள் நெரிந்தன. மூன்றாவது வாக்கியம் ஆரம்பமானதுமே அவளுடைய முகம் வெளுத்து விட்டது. நான்காவது வாக்கியத்தைக் கேட்டதும் நீண்ட பெருமூச்சு விட்டவாறே அவள் நாற்காலியில் சாய்ந்து விட்டாள். ஆனால் அவள் மனம் கேட்கவில்லை. மறுபடியும் நிமிர்ந்து உட்கார்ந்து, கம்பிகளைப் பிடித்துக் கொண்டு, காது கொடுத்துக் கேட்கலானாள். போலீஸார் சொல்லிக் கொடுத்திருந்த சாட்சியத்தைத்தான் அவன் அங்கே ஒப்பித்துக் கொண்டிருந்தான். நியாயஸ்தலத்திலோ நிச்சப்தம் நிலவியிருந்தது. 'ரமாகாந்த் தன்னை ஒரு முறையாவது திரும்பிப் பார்க்கமாட்டானா?' என்ற எண்ணத்துடன் பத்மா அநேகத் தடவை கனைத்துக் கொண்டாள். ஆனால் அவனுடைய தலை வரவரத் தொங்கியதே தவிர நிமிரவேயில்லை. பத்மாவின் கனைப்புச் சத்தத்தைக் கேட்டுத்தான் அவன் அப்



"ஏனுங்க! இதுதானே பஸ் ஸ்டாண்டு?"
"ஆமாம்!"
"பின்னே ஏனுங்க அவங்கள்ளாம் அங்கே போய் நிக்கறாங்க?"
"அவுங்கள்ளாம் முன்னுக்கு வருகிற ஆளுங்க!"

படிச் செய்தானோ, அல்லது அவனுடைய ஆத்மாவேதான் அவனை அப்படி ஆட்டி வைத்ததோ, தெரியாது. அவனுடைய குரலும்கூடக் கொஞ்சம் கம்மிவிட்டது.

பத்மாவுக்குப் பக்கத்திலே உட்கார்ந்திருந்த ஒரு பெண்மணி மூக்கைச் சிணுங்கிக் கொண்டு, "இந்தத் துஷ்டனின் நெஞ்சைத் திருகிக் கொன்றால் என்ன? அப்பப்பா! இந்த மாதிரித் தன்னலக்காரப் பாவியும் இருப்பானா? காசு காசுக்கு ஆசைப் பட்டுக்கொண்டு நிரபராதிகளை மாய்ப்பதா? நினைத்தாலே நெஞ்சம் குமுறு கிறதே!" என்றாள்.

பத்மா பதில் ஒன்றும் சொல்லவில்லை.

கண்களில் கண்ணாடி அணிந்துகொண்டு பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த இன்னொரு பெண்மணி, நிராசை தோய்ந்த குரலில், "இந்தத் துர்ப்பாக்கியம் பிடித்த தேசத்தைப் பகவான்தான் காப்பாற்ற வேண்டும். இம்மாதிரி நிரபராதிகளின் நெஞ்சைத் திருகுவதனால் இந்தக் கட்டை யிலே போகிறவனுக்குக் கவர்னர் பதவி கிடைத்துவிடப் போகிறதா? குட்டிக் கரணம் போட்டாலும் குமாஸ்தா வேலை கிடைப்பதே குதிரைக் கொம்பாயிற்றே! அப்படி யிருக்கும்பொழுது எவனாவது இம்மாதிரியான நீசத்தனமான காரியத்தில் இறங்குவானா? இந்தப் பேராசைப் பேயை என்ன செய்தால் தேவலை?" என்று தன் ஆத்திரத்தைக் கக்கினாள்.

அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த இன்னொரு பெண்மணி, "பார்த்தால் படித்தவன் போலவும் பெரிய குடும்பத்துப் பிள்ளை போலவும் இருக்கிறான். இந்தக் கெட்ட காரியத்தில் எப்படி இறங்கத் துணிந்தான் என்றுதான் புரியவில்லை" என்றாள்.

"இந்தப் பேராசை பிடித்த நாய்களை நாலு சந்து கூடுமிடத்தில் நிறுத்தி, காது அறுந்த செருப்பை எடுத்துக்கொண்டு, உச்சந்தலையில் 'பளார், பளார்' என்று சாத்தினால்தான் புத்தி வரும். இப்படிப் பொய்ச் சாட்சி சொல்லி என்ன மானங் கெட்ட பிழைப்பு வேண்டிக் கிடக்கிறது?" என்றாள் மற்றொருத்தி.



அனலைக் கக்கும் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு, பத்மாவினால் அங்கே நிற்க முடியவில்லை. 'அந்த ஆசாமி சொல்லுவது அவ்வளவும் பொய். உண்மைக் கலப்பே கொஞ்சங்கூட இல்லை என்று எழுந்து சொல்லிக் கூட்டை உடைத்து விட்டால் என்ன?' என்று அவளுடைய மனம் துடியாய்த் துடித்தது; சொல்லக்கூட வாய் எடுத்துவிட்டாள். ஆனால் 'என்ன ஆகுமோ?' என்ற பயம் அவள் நாக்கை அடக்கிவிட்டது. கடைசியில் அவள் அங்கே நின்றுகொண்டு அவர்களுடைய சுடும் சொற்களைக் கேட்டுக் கொண்டிருப்பதைவிட, இறங்கி வெளியே சென்று விடுவதுதான் உசிதம் என்று எண்ணினாள்.

அவள் கீழே இறங்கி வருவதைக் கண்ட தேவிநீரும் அவள் பின்னோடு வெளியே

ந்து, அன்பு தோய்ந்த குரலில், "வீட்க்கா புறப்பட்டுவிட்டாய், அம்மா?" ன்று கேட்டான்.

பத்மாவின் கண்களில் நீர் முட்டியது. தைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு, "ஆமாம், இனிமேல் என்னால் இங்கே ட்கார்ந்திருக்க முடியாது" என்றாள்.

கோர்ட்டுக் கட்டிடத்தைத் தாண்டிய ம், தேவீநின் அவளுக்கு ஆறுதல் ளிக்கும் நோக்கத்துடன், "போலீஸா டம் என்ன வசிய மருந்து இருக்கிறதோ, ரியவில்லை. ஆள் மாட்டிக்கொண்டால் மாட்டிக்கொண்டதுதான். பிறர் சொல்வதெல்லாம் அவன் காதுகளில் அப்புறம் றுவதே யில்லை" என்றான்.

பத்மா வெறுப்புடன், "அதெல்லாம் யத்தால் கொள்ளிகள் செய்யும் காரியம் அல்லவா?" என்றாள்.

பிறகு இருவரும் சிறிது நேரம் பேசாம லேயே நடந்தனர். பத்மா திடீரென்று, "என் நாத்தா? இன்னும் எங்கேயாவது அப்பீல் உண்டா, அல்லது இங்கே ர்ப்புக் கூறிவிடுவதுடன் சரியா?" ன்று கேட்டாள்.

தேவீநின் அவளுடைய கேள்விகளின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு, "இல்லை, இன்னும் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய் தாலும் செய்யலாம்" என்றான்.

மறுபடியும் இருவரும் கொஞ்ச நேரம் பேசாமல் சென்றனர். பத்மா ஒரு மரத்தின் நிழலில் நின்று, "என் நாத்தா, இன்றைக்கே ஜட்ஜிடம் போய் விஷயத்தைச் சாங்கோபாங்கமாகச் சொல்லிவிட்டால் என்ன? நான் 'ருசு'ச் செய்தால் அவர் ஒப்புக்கொண்டுதானே ஆகவேண்டும்? ஆகையால் 'அவரிடம் சொல்லிப் பார்ப்போமே' என்று தோன்றுகிறது. உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டாள்.

தேவீநின் தர்ம சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருப்பவன் போல விழித்தவண்ணம், "நான் என்னத்தைச் சொல்லுவது? அது ஜட்ஜின் இஷ்டத்தைப் பொறுத்ததல்லவா? மதில்மே லிருக்கும் பூனை இந்தப் பக்கம் குதிக்குமா, அந்தப் பக்கம் குதிக்குமா என்று கேட்டால் நீ எப்படித் தீர்மானமாகப் பதில் சொல்ல முடியும்?" என்றான்.

"இருந்தாலும், உங்கள் வழக்கு பொய் வழக்கு என்று போலீஸாரிடம் அவர் அடித்துச் சொல்லலாம் அல்லவா?"



"சொல்லலாம்; ஆனால் அதற்குத் தைரியம் இருக்க வேண்டுமே, அவருக்கு!"

"என்ன ஆனாலும் சரி, அவரைப் பார்த்து விடுவதுதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது. சாதாரணமாக எல்லாரையும் அவர் பார்ப்பது உண்டல்லவா?"

"வா, எதற்கும் போய் விசாரித்துப் பார்ப்போம். ஆனால் அப்படிச் செய்வது ஆபத்தாக முடிந்துவிட்டால்............?"

"ஆபத்தாக முடிவானேன்?"

"தம்பி பொய்ச் சாட்சியம் சொன்னான் என்ற குற்றத்துக்காக அவனுக்குக் கடுந் தண்டனை அளிக்கலாம் அல்லவா?"

"அதற்குப் பயந்தால் முடியுமா? பண்ணின பாவத்துக்குப் பலன் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்? அதற்குக் கவலைப்பட்டால் கட்டாது" என்றாள் பத்மா.

தேவீநின் விருப்பு, வெறுப்பு அற்ற பத்மாவின் சொற்களைக் கேட்டுப் பிரமித்தான். பிறகு தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "அதோடு விட்டுவிட்டால் தான் பாதகமில்லையே! ஆனால் இன்னொரு விஷயத்துக்கும் அல்லவா பயப்படவேண்டியிருக்கிறது" என்றான்.

பத்மா வெகு அலட்சியமாக, "அதென்ன, அப்படிப் பிரமாதமான விஷயம்?" என்றாள்.

"இந்தப் போலீஸ்காரர்கள் இருக்கிறார்களே இவர்கள் மிகவும் பயங்கரக்கொள்ளிகள். பிறரை அவமானப்படுத்தக் கொஞ்சமும் அஞ்சமாட்டார்கள். நீ போய் இதையெல்லாம் சொல்லுவது தான் தாமதம்; ஜட்ஜ் போலீஸ் கமிஷனரைக் கூப்பிட்டுச் சொல்லிவிடுவார். கமிஷனர், 'இதேதடா இது! இந்தப் பெண் நம் காரியத்தைக் கெடுத்துவிடுவாள் போலிருக்கிறதே' என்று எண்ணி உன்னையே கைது செய்யும்படி உத்தரவிட்டாலும் இட்டுவிடுவார். ஜட்ஜ் வெள்ளைக்காரத் துரையாயிருந்தால், தைரியமாகப் போலீஸாரின் வாலை ஒட்டக் கத்தரித்துவிடுவான். ஆனால் நம் பக்கத்து ஆசாமிகள் இருக்கிறார்களே, இவர்கள் சுத்தத் தொடை நடுங்கிகள். 'நம்மையே கலகத்தில் சம்பந்தப்படுத்திக் குற்றம் சாட்டிவிட்டால் என்ன செய்வது?' என்ற பயத்தில், கமிஷனரைக் கூப்பிட்டுச் சட்டாயம் சொல்லிவிடுவார்கள். சிற்சில சமயம் சாட்சி மாறிவிடுவான் என்றோ, குட்டை உடைத்துவிடுவான் என்றோ தோன்றினால் போலீஸார் அவன் குடும்பத்தாரை ஹிம்சிப்பதும் உண்டு. அவர்களுடைய காரியத்துக்குக் கணக்கு, வழக்கு, நீதி, நியாயம் என்று ஒன்றும் கிடையாது" என்றான் தேவீதீன்.

இதைக் கேட்டதும் பத்மாவுக்கு உதறல் எடுத்தது. 'தன்னைக் கைது செய்து விடுவார்களே!' என்பதற்காக அல்ல; 'ரமாநாத் மீது இன்னும் கொடுமைகள் புரிய ஆரம்பித்து விட்டார்களானால் என்ன செய்வது?' என்ற பயம் தான் அவளை மிகவும் வாட்டியது. பட்டினியுடனும் பசியுடனும் கால் கடுக்க வெகு தூரம் நடந்துவிட்டு வந்தவளைப்போல, அவளுக்குக் களைப்பு மேலிட்டது. அவளுடைய நல்ல எண்ணமும் துணிவும் பாகாக உருகிவிட்டன.

இன்னும் கொஞ்ச தூரம் சென்றதும், அவள் தேவீதீனிடம் மறுபடியும், "இனிமேல் அவரைக்கூடப் பார்க்க முடியாதல்லவா?" என்று கேட்டாள்.

"தம்பியையா?"

"ஆமாம்."

"முடியாது; இன்னும் கடுங்காவல் வைத்துவிடுவார்கள். ஒருவேளை அந்தப் பங்களாவையே விட்டுவிட்டுப் போயிருந்தாலும் போயிருக்கலாம். அவனை பார்க்க முடிகிறது என்றே வைத்துக்கொள். இனிமேல் அவனால் என்ன பிரயோசனம்? இனிமேல் அவனால் தன் சாட்சியத்தை மாற்றிக்கொள்ள முடியப் போவதில்லை. அப்படி மாற்றிக் கொண்டாலும் பொய்ச் சத்தியம் செய்ததாகக் குற்றம் சுமத்திவிடுவார்கள்."

இன்னும் சிறிது தூரம் சென்ற பின் பத்மா, "இங்கே இருந்து நான் என்ன செய்யப் போகிறேன்? 'ஊருக்கே போய்விட்டால் என்ன?' என்று தோன்றுகிறது" என்றாள்.

தேவீதீன், "இல்லை அம்மா! நீ ஊருக்குப் போகிறேன் என்ற பேச்சையே எடுக்கக் கூடாது. உன்னைப் பிரிந்து எங்களால் ஒரு நிமிஷங்கூட உயிர் வாழ முடியாது. கிழவி அழுது அழுது உயிரை விட்டுவிடுவாள். நீ இங்கேயே இருந்து தீர்ப்பு என்ன ஆகிறது என்று பார்' தம்பி இப்படிப் போய்விடுவான் என்று நான் எண்ணவேயில்லை. உன் ஜாதி ஜனம் சர்க்கார் வேலைக்கு ஏன்தான் இப்படி உயிரை விடுகிறதோ, எனக்குப் புரியவில்லை. எனக்கு ஒருத்தர் மாதம் நூறு ரூபாய் தருகிறேன் என்று சொன்னாலும் நான் உத்தியோகம் பார்க்கமாட்டேன். வியாபாரம் செய்வது என்பது வேறு விஷயம். அதில் மனிதனுக்கு அலுப்பே தோன்றுவதில்லை. ஆனால் உத்தியோகம் பார்ப்பதில் என்னவென்றால் ஆபீஸில் ஐந்தாறு மணி நேரம் உட்கார்ந்துவிட்டால் மனிதன் அலுத்துச் சலித்து ஆய்ந்து ஓய்ந்துபோய் விடுகிறான்!" என்றான்.

அதற்குப் பிறகு வழியில் அவர்கள் ஒன்றும் பேசவில்லை. பத்மாவின் மனம் எவ்விதத்திலும் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. இன்னொரு முறை ரமாநாத்தைப் பார்க்க முடிந்தால், அவள் தன் உள்ளத்தில் கடல்போலக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் கடுஞ்சொற்களைக் கொண்டு அவனுடைய மனதை மாற்றப் பார்க்கலாம் என்று எண்ணினாள். அவளுக்கு ரமாநாத்மீது தயவோ அனுதாபமோ கொஞ்சங்கூட ஏற்படவில்லை. 'உங்கள் பணத்தையும் காசையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் அதை ஏறெடுத்துக்கூடப் பார்க்கத் தயாராயில்லை. உங்களுடைய ரத்தக் கறை படிந்த கொலைகாரக் கைகளினால்

என்னைத் தீண்டாதீர்கள். நீங்கள் தொட்டால் என் உடல் வெந்து கொப்புளித்து விடும். எவனொருவன் பணத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டுக்கொண்டு தன் ஆத்மாவையே விலைக்கு விற்று விடுகிறானோ அவனை நான் மனிதன் என்று எண்ணவில்லை. அப்படிச் சொல்லுவதுகூடச் சரியில்லை; மிருகத்திலும் கேடுகெட்டவன் என்றுதான் சொல்லவேண்டும். உங்களைப் போன்ற பயந்தாங்கொள்ளியை—பேடியை நான் கண்டதேயில்லை' என்று இம்மாதிரியான சுடுஞ் சொற்களால் நிந்திக்க வேண்டும் என்று எண்ணினாள்.

பத்மாவின் முகத்தில் களை பொருந்திய ஒருவித ஒளி வீசியது; கர்வத்தினால் கழுத்தும் நிமிர்ந்தது. "அவர் சரிகைத் தலைப்பாகையைத் தலையில் வைத்துக் கொண்டு குதிரையின்மேல் ஏறி 'ஜாம் ஜாம்' என்று வருவதைப் பார்த்துப் பத்மா பூரித்துப் போய்விடுவாள்' என்று தம் மனத்தில் எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் பத்மா அவ்வளவு கேடு கெட்டவள் அல்ல. நீங்கள் குதிரையிலேறி பவனி வந்தாலும் சரி; வானத்திலேயே பறந்து வந்தாலும் சரி; என்னைப் பொறுத்தவரை நீங்கள் கொலையாளி, கொலையாளிதான்! தன் உயிரைக் காத்துக்கொள்ளுவதற்காக, இத்தனை நிரபராதிகளின் கழுத்தில் கத்தியை வைத்த படுபாவிதான்! நான் போகும்பொழுது எவ்வளவு தடவை படித்துப் படித்துச் சொன்னேன்! அவ்வளவு வார்த்தைகளும் செவிடன் காதில் ஊதின சங்கு மாதிரிதானே ஆயிற்று? கட்டிக் கொடுத்த சாதமும் சொல்லிக் கொடுத்த வார்த்தையும் உபயோகப்படாது என்பது சரியாகத்தானே இருக்கிறது? அப்பப்பா! எதற்குத்தான் இவ்வளவு பணத்தாசையோ? இந்தப் பேராசை பிடித்த ஜன்மம் எதற்கோ? நினைத்தாலே நெஞ்சு குமுறுகிறது. நீங்கள் எக்கேடாவது கெட்டுத் தொலையுங்கள்! எனக்கு என்னைக் காத்துக் கொள்ளத் தெரியும். நீங்கள் ஒன்றும் கைகொடுத்து உதவ வேண்டியதில்லை."

இம்மாதிரி அலைமோதும் எண்ணங்களில் லயித்தவாறே அவள் தன்னுடைய வீட்டை அடைந்தாள்.

(தொடரும்)

காலக்ஷேபம்

பிரமாதந்தான்!

சங்கீத ரஸிகர்:—நம்ம குப்புசாமி பாகவதர் நேத்திக்குக் கச்சேரி பண்ணினாரே, நீ வரவில்லையா?

நண்பர்:—நேற்றைக்கு நான் வர முடியவில்லை. கச்சேரி மேடைக்கு ஓயாமல் சீட்டுப் பறந்து கொண்டிருந்ததாமே! ராமு சொன்னான். கச்சேரி பிரமாதமா யிருந்ததோ?

ரஸிகர்:—அதெல்லாம் ஒன்றுமில்லை. மங்களத்தைத்தான் சீக்கிரம் பாடச் சொல்லி எழுதி யிருந்தது!

★

ரொம்ப நல்லது!

வேலைக்காரி (புதிதாக வந்தவள்):—குழந்தை, தூங்கு அம்மா! அம்மா வருவதற்குள் தூங்கிவிட வேண்டும். நான் கதை சொல்லுகிறேன். கேட்டுக் கொண்டே தூங்குகிறாயா?

குழந்தை:—எனக்குக் கதை வேண்டாம்!

வேலைக்காரி:—ஒரு பாட்டுப் பாடட்டுமா?

குழந்தை:— ஊஹூம்; வேண்டவே வேண்டாம்!

வேலைக்காரி:— உனக்கு என்னதான் வேண்டும்?

குழந்தை:—நீ என்னைத் தொந்தரவு பண்ணாமல் வெளியே போய்க் கொஞ்ச நேரம் உலாவிவிட்டு வா; நான் தூங்கிவிடுகிறேன்!

காரணம்!

வந்தவர் (கைதியிடம்):—ஆள் பார்க்க நன்றா யிருக்கிறாயே! உன்னை எப்படியப்பா பிடித்துப் போட்டார்கள்?

கைதி:—கால்கள் குட்டையாக இருப்பதாலே என்னால் வேகமாக ஓட முடியவில்லை, பிடிச்சு விட்டாங்க!

வந்தவர்:—ஏன் உன்னைப் பிடிக்கவந்தாங்க?

கைதி:—கை நீளமாக இருந்ததனாலே!

★

இரண்டும் ஒன்றுதான்!

"ராமுவுக்குத் தன் பிரம்மசரிய வாழ்க்கை அலுத்துப் போச்சாமே!"

"ஆமாம், ஒன்று கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்; இல்லையென்றால் ரேடியோ செட்டாகிலும் வாங்க வேண்டும் என்கிறான்!"

★

அடாடா!

"உங்கள் இயந்திர சாலை நெருப்புப் பிடித்து அழிந்து விட்டது என்று கேட்டு ரொம்பவும் வருத்தப் பட்டேன். ஆமாம், அந்த இயந்திர சாலையில் நீங்கள் என்ன உற்பத்தி பண்ணிக் கொண்டிருந்தீர்கள்?"

"நெருப்பணைக்கும் இயந்திரங்கள்!"

No. 3.



Policy
WORLD WIDE POLICY NO.558
ஒரே ஒரு பிரீமியம்
உங்கள் வருங்காலத்திய
எழுதும் நிலைமையின் முன்னேற்
றத்தை இன்ஷ்யூர் செய்கிறது.
ரூ. 15/-
இங்கிலாந்தில் செய்யப்பட்டது.
MENTMORE
Auto-Flow
மெண்ட்மோர் ஆடோப்ளோ.
FOUNTAIN PEN

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI பிப்ரவரி 8, 1948 4 அணா

REGD. NO. M. 4392

